தொழில்

INDUSTRY

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்



SMALL INDUSTRIES EXHIBIT SUPPLEMENT

1-9-59

25 காசுகள்

"LINGAM"

Energy Food Biscuits, Cakes Etc.

★

Manufactured by

Lingam Biscuit Company,

90, Adam Sahib Street,

Royapuram :: Madras-13.

★

AVAILABLE ALL OVER MADRAS

BUY, EAT AND ENJOY.

THOZHIL தொழில்

Industry Special Issue

1—9—1959

தொழில் சிறப்பு மலர்.

1—9—1959.

CONTENTS

America guides 3

The birthday of our Hero ! 6

Makkal Paneil Kathiroan... 9

Nalvar Therryvitha Nalla Karutthukkal ... 12

Sumathyin Sabatham ... 17

Kudymiah? Krappah? ... 28

Photography ... 37

Madras State Industrial Development ... 55

The growth of Indian Small Scale Industries ... 66

Kalai Manam (cinema) ... 75

பொருளடக்கம்

அமெரிக்க நாடு வழிகாட்டுகிறது. ... 3

வீரர் பிறந்த நாள் ... 6

மக்கள் பணியில் கதிரோன் ... 9

நால்வர் தெரிவித்த நல்ல கருத்துக்கள் ... 12

சுமதியின் சபதம் ... 17

குடுமியா? இருப்பா? ... 28

புகைப்படப் பிடிப்பு ... 37

சென்னை மாநிலத்தில் தொழில் துறை வளர்ச்சி 55

இந்தியாவின் சிறுதொழில் வளர்ச்சி ... 66

கலை மணம் ... 75

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

U. S. I. S.
158, MOUNT ROAD,
MADRAS.

August 25, 1959

To
Mr. K. PERUMAL UDAYAR
Editor, THOZHIL
55, Edapalayam Steet
Madras-3

MESSAGE TO THOZHIL EDITOR

It gives me great pleasure to learn that you are bringing out a special supplement on the United States Small Industries Exhibition at Madras.

The Small Industries Exhibition is geared to help India achieve the goals of her Five Year Plans. The exhibit is based on Gandhiji's principle, "for the welfare of all." The Father of the Nation envisaged the development of the small industry as the core of India's economic growth. President Eisenhover expressed a similar conviction in his message at the opening of the Exhibition in Calcutta when he said: "The creative ideas which originate in such enterprises contribute significantly to the economic life of a nation."

The U. S. exhibition relates America's experience in small industrial development and demonstrates how machines can provide business opportunities and employment for the people of India.

Please accept my congratulations and good wishes for the success of your supplement.

(Sd,) ORVAL HOPKINS,

Acting Public Affairs Officer.

" அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர்; கே. பெருமாள் உடையார்.

தொழில் 2	சென்னை, 1—9—'59	இதழ் 9

அமெரிக்க நாடு வழி காட்டுகிறது!

செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து சென்னை ஐலண்டு மைதானத்தில் அமெரிக்கச் சிறு தொழில்கள் கண் காட்சி நடக்கிறது. அமெரிக்கப்பொருளாதாரமா? அங்கே எல்லாம் பெரிய பெரிய கம்பெனிகளுக்குத்தான் இடம். அவைமட்டும்தான் வாழும் என்பதாக ஓர் எண்ணம் பலரு டைய மனத்திலும் படர்ந்திருக்கிறது. ஆனல் யு. எஸ். சிறு தொழில்கள் கண்காட்சி, அந்தத்தப்பெண்ணத்தைமாற்றும்.

பல்லாயிரம் சிறுதொழில்கள் நடந்தால்தான் பெருவாரி உற்பத்திப்பெருந்தொழில்கள் நடைபெற முடியும். உதாரண மாக, மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுக்கு வேண்டிய உறுப்புகள் ஐந்து லட்சம் சிறுதொழில்களிட மிருந்து கிடைக்கின்றன. இந்தச் சிறுதொழில்கள் சில வற்றில் முப்பதுபேர் வேலை செய்வார். இன்னும் சிலவற்றில் மூன்றே மூன்று பேர்தான் இருப்பார். இவ்வாறு சிறு தொழில்கள் இல்லாமல் பெருந்தொழில்கள் வாழா என்பதை

அமெரிக்கப் பொருளாதாரம் பற்றிப் பேசுவோர் பெரும் பாலும் மறந்து விடுகின்றனர்.

208369

அமெரிக்கக் கம்பெனிகளில் பெரும்பான்மையும், சிறிய வைகளே; அமெரிக்காவில் 45 லட்சம் தொழில்கள் இருப்ப தாகக் கணக்கு. இவற்றில் ஐந்தில் மூன்று பங்கு, 4 பேருக் கும் குறைவாக வேலை செய்பவையாகும்; தொழில் துறையில் புதிப்புதுக்கருத்துக்களும், புதுப்புது முறைகளும், விஞ் ஞானப் புதுமைகளும், தோன்றுவதற்கு சிறுதொழில்களே மூலகாரணமாகுமென்பது யாரும் அறிந்த விஷயமாகும். அமெரிக்கப் "பேட்டண்டு" அலுவலகம் வெளியிடும் புள்ளி விவரம் 1921க்கும் 1933க்கும் இடையே பதிவான உரிமைப் பதிவுகளில் 100க்கு 43 தனித்தனியாட்கள் பதிவு செய்தவை. நூற்றுக்கு 34.5 சிறுதொழில்களும், நடுத்தரதொழில்களும் பதிவு செய்தவையாகும். ஆகவே உரிமைப்பதிவுகள் எல்லா வற்றிலும், நூற்றுக்கு 77 சிறுதொழில்களாலும் தனித்தனி மக்கள் முயற்சிகளாலும் ஏற்பட்டிருக்க, பொருளாதார வளர்ச்சிக்கு இத்தொழில்கள் எவ்வளவு முக்கியம் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஓர் ஊரில் சிறு சிறு தொழில்களாகப் பல தொழில்கள் இருப்பது தொழிலாளர்களுக்கு நல்லது. வேலைவாய்ப்பு மட்டு மல்ல; விரும்பிய இடத்துக்கும் வேலைக்குப் போகலாம். உற்பத்தி, பணி, விநியோகம் ஆகிய துறைகளில் பற்பல சிறு சிறு தொழில்கள் நடப்பது ஊருக்கு அழகுமாகும்; மக்கள் சுய சிந்தனையும் பொறுப்புணர்ச்சியும் உள்ளவர்க ளாக வாழவும் அது உறு துணையாகும்.

சுதந்திர சமுதாயத்தில் வேலைவாய்ப்புச் சுதந்திரம் உண்டு என்றாலும், தொழிலில் இறங்குவோர் அனைவருக்கும் பலன் உறுதி என்பதில்லை. பலன் காணவேண்டுமானால் முடிவு எடுக்கும் திறனும் அனுபவமும் முக்கியமாக இருக்க வேண்டும். இவைகள் இல்லாவிடில் தொழில் துறையில் வெற்றிகாணமுடியாது. நிர்வாகத்திறன் சரிவர அமையா மையே சிறுதொழில்களுக்குள்ள ஒரு பெரிய இடையூறு.

மேற்சொன்ன கருத்துக்களெல்லாம், நாம் அமெரிக்கப் பொருளாதாரத்திலிருந்து கண்டு தெரிவது. அமெரிக்கச் சிறு தொழில்கள் கண்காட்சியை, நாம் பார்க்கும்போது, மேற் கூறியகருத்துக்களை நாம் ஊன்றிக்கவனிப்பது சாலச்சிறந்த

தாகும். தொழில் நடத்துபவர் நிர்வாகத்தலைமையில் பயிற்சி பெறுவதற்கு அமெரிக்காவில் அரசாங்க நிலையங்கள் உதவி புரிகின்றன. அரசாங்கத் திட்டப்படி பயிற்சி அளிக்க 155 கல்வி நிலையங்கள் முன்வந்து உதவுகின்றன. ஆடவரும் பெண்டிருமாக 13,550 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இப்படிப்பட்ட முறையில் சிறுதொழில்களை வளர்ச்சி அடைய, இந்தியாவும் முன்வரவேண்டும். தொழில் துறையில் முன்னணியில் நிற்கும் அமெரிக்காவைப்பார்த்து, அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகளை நாம் கடைப்பிடித்தால, உண்மையிலேயே, நாம் சிறுதொழில்களை வளர்க்க முடியும்.

அமெரிக்கச் சிறுதொழில்கள் கண்காட்சி சென்னையில் நடப்பதுபோல், இந்திய அரசாங்கமும் நம்முடைய சிறு தொழில்களை ஊக்குவிக்க அதிகச்செலவுகளில்லாமல் பற்பல சிறுதொழில்களின் கண்காட்சிகள், இந்தியாவிலுள்ள, முக்கிய இடங்களில் நடத்தவேண்டுவது மிக அவசியமாகும். இது அவசரமும்கூட. அமெரிக்காவை, வழிகாட்டியாக வைத்து, தொழில்துறையிலே, அதுசெல்லும் வழியில் நாமும் சென்றால், உண்மையிலேயே, நாமும், தொழில் துறையில், முன்னேறி உலகில் பொருளாதார வலிமைமிக்க ஒரு நாடாக விளங்க முடியும் என்பது திண்ணம்.

சீர்திருத்தம்!

தனிநபர்கள்சீர்திருத்தங்களைசெய்யமுடியாது. அவர்கள், சமுதாயம் முழுவதும் சீர்திருத்த மாறுதலுக்குத் தகுந்தவாறு மாறும் வரை காத்திருக்க வேண்டுமென்று கூறுவது சரியல்ல.

தீவிரமான சீர்திருத்தக் காரர்கள் மனிதத்தன்மையற்ற விரும்பத்தகாத பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிந்ததனால்தான் எந்த சீர்திருத்தமும் கொண்டு வரப்பட்டதே தவிர, சமூகம் அதற்குத் தயாராகும் வரை காத்திருப்பதினாலோ, வேறு எந்த வழியினாலோ சீர்திருத்தம் வந்து விடவில்லை. சீர்திருத்தத்தின் கவலை சீர்திருத்த தகாராறுக்கே உண்டு. சமூகத்திற்கு அந்த வாய்ப்பு கொடுக்கப்படவில்லை.

—காந்திஜி.

வீரர் பிறந்த நாள்!

தமிழ் நாட்டின் வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டிய நாள் செப்டம்பர் 5ந்தேதி. ஆம்! அந்தப் புனிதநாள்தான், கப்பலோட்டிய தமிழன் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களை ஈன்று எடுத்துத்தந்த நன்னாள். அந்நாளை நாம் மறக்க முடியுமா?

நெல்லை மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம் என்ற ஒரு சிற்றூரில்தான், செக்கிழுத்த, வ. உ. சி. 1872ம் ஆண்டு செப்டம்பர் 5ந்தேதி பிறந்தார். மக்களிடையே அறியாமையும், அச்சமும், தன்னலமும், இச்சகம் பேசி வயிறு வளர்க்கும் இழிந்த மனப்பான்மையும் நிலவி இருந்தகாலத்தில் வ. உ. சி. அந்தக் கேடுகளை தகர்க்க முற்பட்ட தனிப்பெரும் வீரராகத் தோன்றினார்.

தேசபக்தி, தன்னலத்தியாகம், அஞ்சா நெஞ்சம், தமிழ்ப் பற்று, சொல்வன்மை, செயல் திறம், பெருந்தன்மை, நாட்டு மக்களின் நல்வாழ்வில் அளவற்ற ஈடுபாடு முதலிய பண்புகளின் திருவுருவம்தான் வ. உ. சி. அரும்பெரும் கருத்துக்கள் நிரம்பிய தமிழ் நூல்கள் பல அவர் எழுதியுள்ளார்.

வழக்கறிஞராக அவர் செய்த தொண்டுகள் பல உள; ஏழை எளியவருக்காக இலவசமாக வாதாடினார். போலீஸாரின் பொய் வழக்குகளையெல்லாம் தகர்த்து எறிந்தார். வழக்காடுவதில் வல்லவர். ஒரு சமயம் அவரும், அவர் தந்தையும் வாதி பிரதிவாதிகள் தரப்பில் வாதாடினர்; மகன் வென்றார் என்றால் அவரது வழக்கு உரைக்கும் திறனுக்குச் சான்று வேறுவேண்டுவதில்லை.

MADRAS MEDICALS

53, EDAPALAYAM ST., MADRAS-3.

P. B. No. 2328,

WHOLESALE DEALERS IN

All Drugs,
Patent Medicine,
Spirituous preparations,
Tablets of all kinds,
Antibiotic Items,
Injictubs & Common Amps,
Empty Bottles & Surgical
Instruments Etc. Etc.

SUPPLIERS TO

Govt. General Hospitals,
Govt. Hospitals &
Govt. Dispensaries,
Tea & Coffee Estates,
Mission & Private Hospitals
&
Doctors Etc. Etc.

அந்நாளில் வெள்ளையரே கடலாதிக்கம் கொண்டிருந்தனர். கடலாட்சி அந்நியர் வசம் இருக்கும் வரை, நாட்டாட்சி நம்கைக்கு வருவது கடினம் என்ற முடிவுக்கு வ. உ. சி. வந்தார். 1905ல் சுதேசிக்கப்பல் கழகம் நிறுவப்பெற்றது. வ. உ. சி. சொந்தத்தில் கப்பல்வாங்க பம்பாய் சென்றார். "கப்பலோடு தமிழகம் வருவேன், இல்லையெனில் கடலில் மிதப்பேன்" என்று வீர முழக்கம் செய்த வ. உ, சி. வெற்றி கண்டார். "கப்பலோட்டிய தமிழன்" என்ற அழியாப்புகழைச் சம்பாதித்தார்.

வெள்ளையர்கள் ஆட்சியில் அரசியல் சூழ்ச்சியினால் அவருக்கு சிறைவாசம் கிடைத்தது. சிறையில் கல்லுடைத்தல் முதல் செக்கிழுத்தல் வரைப் பலவிதக்கொடுமைகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். வ. உ. சி. தாய்நாட்டின் மேல்கொண்ட தணியாத பேரன்புதான், இவ்வீரவேள்வியில் அவருக்கு வெற்றி நல்கியது.

தொழில் துறையில் அவர் செய்த சேவைகள் பல; அவர் ஊக்குவித்தத் தொழில் புரட்சிதான், தற்போது நாட்டைத் தொழில் மயமாக்கும்முயற்சியில் நாம் ஈடுபாடுகொண்டுள்ளதற்கு வித்தாக விளங்குகிறது. செயற்கரிய காரியங்கள் செய்யும் பரம்பரை தமிழ்நாட்டில் பெருகவேண்டும். நமக்கு வழிகாட்டக்கூடிய அழியா ஜோதியாக இருக்கிறார் வ. உ. சி. அவருக்கு தமிழ்நாடு தலைவணங்குகிறது.

போன் : 31738. தந்தி : மெரிகோல்ட்

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

55, எடப்பாளையம், தெரு, சென்னை-3.

விளம்பர விகிதம்

கடைசி மேல் அட்டை 3 கலர்		...	175	0	0
,,	2 கலர்	...	125	0	0
,,	கலர் இல்லாமல்	...	100	0	0
,,	உள் பக்கம்	...	75	0	0
உள் பக்கம்	1 பக்கம்	...	50	0	0
,,	½ பக்கம்	...	30	0	0
,,	¼ பக்கம்	...	20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்டிராக்ட் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.

எரிபொருள் ஆராய்ச்சி!

நிலக்கரியிலிருந்து எரி திரவம் வடிக்கும் ஆராய்ச்சியில், விஞ்ஞான-தொழில் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த வாரன் ஸ்பிரிங் ஆராய்ச்சி நிலையத்தில பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஈடு பட்டிருக்கிறார்கள். இதற்காக நிறுவப்பட்ட சோதனைத் தொழிற்கூடத்தை நிருபர்கள் அண்மையில் பார்வையிட்டார்கள். இங்கு நாள் ஒன்றுக்கு 6 டன்கள் நிலக்கரியிலிருந்து 70 முதல் 100 காலன்கள் எரி திரவம் வடிக்கப் படுகிறது. நிலக்கரியை அதிஉஷ்ண நிலையில் வாயுவாக்கி தன்னிலைமாறா செயல் ஊக்கிகள் மூலம், அதிலுள்ள எரிபொருளைப் பிரிக்கிறார்கள். இந்தச் சோதனை வெற்றிபெற்றதும் வியாபார ரீதியில் தொழிற்சாலை நிறுவும் முயற்சி தொடங்கும்.

—●—

ஜெட் விமானத்தின் வேகசாதனை

பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த ஒரு 'வாலியண்ட்' வெடி விமானம், மணிக்கு 491.5 மைல்கள் வேகத்தில் பறந்து, 12 மணி 20 நிமிஷங்களில் கேப் டவுனிலிருந்து லண்டனுக்கு வந்தது என்று பிரிட்டிஷ் விமானத்துறை அமைச்சரகம் ஓர் செய்தியை வெளியிட்டது. இது நீண்ட தூர துரிதப் பிரயாணத்தில் புதியதோர் சாதனையாகும். 1953 டிசம்பரில், பிரிட்டிஷ் விமானப்படையைச் சேர்ந்த கான்பெர்ரா விமானம் ஒன்று, 13 மணி 16 நிமிஷங்களில் லண்டன்-கேப் டவுன் பிரயாணத்தைச் செய்தது.

மக்கள் பணியில் கதிரோன்!

—வ. உ. சி. சுப்பிரமணியம்—

(ஆசிரியர், தமிழ்ப் பிரிவு, அமெரிக்க தகவல் நிலையம்.)

கதிரோன் வழங்கும் வெப்பம் வற்றாத ஒரு சக்தி ஊற்று. மக்கள் குலத்தின் நல்வாழ்வுக்கும் அன்றாடப் பணிகளுக்கும் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்துவதில் இன்று மனிதன் பெரும் அளவு வெற்றி கண்டுள்ளான். இந்தியாவைப் போன்ற வெப்ப நாடுகளுக்கு இப்புதிய கண்டு பிடிப்புகள் பேருதவியாக அமையுமென்பதில் ஐயமில்லை. வாழ்க்கை நிலை மேம்பட வேண்டும்; செலவு குறைய வேண்டும் என்பது மக்களின் நிலையான வேட்கை. புதிய இந்த இலட்சியம் கைகூடப் புதிய கண்டுபிடிப்புக்கள் எவ்வளவு உதவும்? சென்னையில் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து 30-ம் தேதி முடிய நடைபெறும் அமெரிக்கச் சிறு தொழில்கள் கண்காட்சியில் புதிய சூரிய சக்திப் படைப்புகளின் பணியையும் பயனையும் மக்கள் நேரில் கண்டறிய நல்ல வாய்ப்பு உண்டு.

உணவு சமைத்தல், வெந்நீர் போடுதல் போன்ற வீட்டு வேலைகளுக்கும் மற்று வாணிப நோக்கங்களுக்கும் சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சூரியக் கதிர் வீச்சு பற்றி இந்திய பௌதிகக் கழகம் பல ஆராய்ச்சிகள் நடத்தி, ஒரு சூரிய அடுப்பு, செய்துள்ளது. பம்பாய் போன்ற இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் ஓர் ஆண்டில் கிட்டத்தட்ட 290 நாட்கள் அவ்வடுப்பை பயன்படுத்த முடியும். இந்நாட்டில் நூற்றுக்கு ஒருவர் சூரிய அடுப்பைப் பயன் படுத்துவராானல் ஆண்டுக்கு ரூ. 21 கோடி மிச்சமாகும்.

சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் அமெரிக்காவிலும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன; நடைபெற்றும் வருகின்றன. வீட்டு வேலைகளுக்குப் பயன்படக்கூடிய பல சூரிய சக்திக் கருவிகளை அமெரிக்க விஞ்ஞானிகள் படைத்துள்ளனர்.

சூரிய சக்தி ஆராய்ச்சியில் டாக்டர் ஜான் ஐ. எல்லாட் ஓர் வல்லுநர். சென்னையில் நடைபெறும் யு. எஸ் கண்காட்சியிலுள்ள சூரிய சக்திக் காட்சிப் பிரிவு இவரது கைத்திறனாகும். அங்கு சூரிய உலைகள், மின்கலங்கள், வானொலிப் பெட்டிகள், கடியாரங்கள் முதலியன காட்சியில் வைக்கப் பெற்றுள்ளன.

அரிய வாய்ப்பு

சூரிய ரேடியோ கேட்கும் நிலையம் ஒரு முக்கிய பிரிவு. கதி



பற்றவைப்பு இயந்திரம் (ஆர்க் வெல்டர்), இது பெட்ரோலில் இயங்குவது. யு. எஸ். சிறு தொழில் கண்காடசியில் காணலாம்.

ரோனின் கதிர்களை இந்தியா பயன்படுத்திக் கொள்ளத்தக்க பலவேறு வாய்ப்புக்களை அறிய இந்நிலையம் பெரிதும் உதவும்.

இங்குள்ள வானொலிப் பெட்டி சூரிய வெளிச்சத்தால் வேலை செய்கிறது; நிலையத்தின் மேல் சூரிய மின்கலம் (பாட்டரி) ஒன்றிருக்கிறது. வெயில் படுவதால் அது மின்னிசை உற்பத்தி செய்கிறது. இந்த மின்விசையின் உதவியால் ரேடியோ இயங்குகிறது. வானொலிப் பெட்டிக்கு மின்னிசையைச் சேகரித்து வைத்துக் கொள்ளக்கூடிய மின் கலங்கள் உண்டு. எனவே இரவிலும் பகலிலும் ரேடியோ பாடும். சிற்றலை நிலையங்கள், மத்திய அலை நிலையங்கள் அனைத்தையும் இந்த வானொலிப் பெட்டியில் கேட்கலாம்.

இந்தியா நெடுகிலும் கிராமங்களில் இதுபோன்ற சூரிய ரேடியோ கேட்கும் நிலையங்கள் நிறுவி மக்கள் உலகத்துச் சேதிகளையெல்லாம் கேட்டறிய முடியும்.

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளவை போன்ற சூரிய சக்தி மின்கலங்கள் தற்போது அமெரிக்காவில் வானொலிப் பெட்டிகள், தொலை பேசிகள், செயற்கைக் கோளங்களிலுள்ள ஒலிபரப்பிகள் முதலியவற்றை இயக்குவதற்குப் பயன் படுகின்றன. வெளியிலிருந்து நேரடியாக மின்னிசை உற்பத்தி செய்யச் சிறந்தகருவிகள் இந்த மின்கலங்கள்.

வ்ருவோரைக் கவர வல்ல மற்றொரு கண்டு பிடிப்பு சூரியக் குமுட்டி அடுப்பு. அமெரிக்கப் பெண் விஞ்ஞானி ஒருவர் படைத்தது இது. சூரியன் இருக்கும் திசையை நோக்கி அடுப்பைத் திருப்புவதன் மூலம் உணவு சமைப்பதற்குத் தேவையான வெப்பம் கிடைக்கும்.

சூரிய நகை உலை மற்றொன்று. மலிவான - சாதாரண பிளாஸ்டிக் லென்ஸ்தான் இவ்வுலையின் முக்கிய உறுப்பு. இது போன்ற உலைகள் அமெரிக்காவில் ஏராளமாகப் புழக்கத்தில் உள்ளன. பொழுது போக்காகச் சிறு சிறு நகைகள் செய்வோர் இது போன்று உலைகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே மல், பற்றவைப்பு உலோகம் போன்றவற்றை உருக்கக்கூடிய

Telegrams : MARIGOLD Phone : 31738

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

அளவுக்கு இவற்றின் மூலம் சூடு உண்டாக்கலாம்.

தொலைவிலுள்ள பொருட்கள் மீது கதிரோனின் கதிர்கள் விழுமாறு செய்யும் தீப்பொறி திரட்டும் கருவி, சூரிய வெப்பத்தால் வெந்நீர் போடும் கருவி, காது கேளாதவர்களின் காது கேட்க உதவும் மூக்குக் கண்ணாடி போன்ற சூரிய சக்தி செவிக்கருவி, சூரிய சக்திக் கடிகாரங்கள் முதலியன சூரிய சக்திக் கண்காட்சியில் பார்க்க வேண்டிய மற்றப் பொருட்கள்.

—✻—

இலங்கையிலிருந்து திரும்பியவர்களுக்கு நூற்பு மில்

திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு மில்ஸ் லிமிடெட்டில் ரூ. 10 லட்சம் மூலதனமுடன் அரசாங்கம் அனுமதித்துள்ளது. பருத்தி நூல் தயாரிப்பதற்காக திருநெல்வேலி மாவட்டம் நாசரத்தில் ஆலை ஏற்படுத்த இதற்கு லைசென்ஸ் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்களுக்கு அனுகூலமளிப்பதற்கென நிறுவப்பட்ட இந்த மில், அவர்களிடமிருந்தும் அவர்களுடைய அனுதாபிகளிடமிருந்தும் பங்குமூலதனமாக 30-7-59 வரையில் ரூ. 3·72 லட்சம் தான் வசூலித்துள்ளது. ஆனால் பங்கு மூலதன மொத்தத் தேவை ரூ. 30 லட்சம் ஆகும். பங்கு மூலதனத் தொகை, குறைந்த பட்சம் அரசாங்கம் போட உத்தேசித்துள்ள மூலதனம் தொகை அளவாவது இருக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. பங்கு மூலதனத்தை மில் சீக்கிரம் திரட்ட வகை காணும்படி கூட்டுறவு ரிஜிஸ்திரார் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

நால்வர் தெரிவித்த

சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் மகாநாடு செயிண்ட் மேரிஸ் ஹாலில் 19—11—50-ல் நடந்தபோது,

அப்பேதைய த. நா. கா. கமிட்டித்தலைவராக இருந்தவரும், தற்போது முதன் மந்திரியாக இருப்பவருமான ஸ்ரீ. கே. காமராஜ், அவர்கள் குறிப்பிட்டதாவது :-

"சிறுதொழில்கள் முன்னேற்றமடைந்தால்தான், இந்திய தேசம் முன்னேற்றமடையும். ஆகவே சிறுதொழில்கள் வளர்ச்சி நாட்டிற்கு முக்கியமாகும். மண்பாண்டத்தொழிலை, நல்லமுறையில் வளர்ச்சி அடையச் செய்து, மண்பாண்டங்களை அதிக அளவு உற்பத்தி செய்தால், வளர்ச்சி அடையும் தொழில்" என்று கூறினர்

24-7-55ல் சென்னை ராஜ்ய இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் மகாநாடு திருச்சியில் நடந்த போது உள்நாட்டு மந்திரி ஸ்ரீ. எம். பக்தவத்சலம் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

"சிறிய தொழில்கள் செய்யும் உற்பத்தியாளர்களுக்கு, சகல வசதியும் சென்னை சர்க்கார் செய்யத்தயார். மண்பாண்டத் தொழில் புராதனமானது. சர்க்கார் அத்தொழில் வளர்ச்சிக்காக ஆவன செய்யத் தயங்காது."

நல்ல கருத்துக்கள் !

1956ல் கோயம்புத்தூரில் நடந்த ஒரு முக்கியக் கூட்டத்தில் நிதி மந்திரி ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"தமிழ் நாட்டில் சகல சிறிய தொழில்களும் அபிவிருத்தி அடைய நம் சர்க்கார் நல்ல திட்டங்கள் வைத்துள்ளது. அத்திட்டங்களை நல்ல முறையில் உற்பத்தியாளர்கள் உபயோகித்துக்கொள்ளவேண்டும்".

சென்னையில் நடந்த இரும்பு எஃகு உற்பத்தியாளர்கள் மகாநாட்டில் தொழில் மந்திரி ஸ்ரீ. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் "சிறிய தொழில்கள் அதிக அளவு முன்னேற்றமடைய வேண்டும் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளை சென்னை சர்க்கார் செய்யத் தயார். ஆகவே சிறிய தொழில்கள் செய்யும் உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தொழில் துறையில் முன்னேற்றம் காண்பது அவசியமாகும். மண்பாண்டத்உற்பத்தியாளர்களுக்குக் காலனி அவசியம்; அத்தொழிலை அபிவிருத்தி செய்வதும் அவசியமாகும்."

தொழில் வளர ஊக்கமூட்டும் யு. எஸ். சிறுதொழில்கள் காட்சி

சிறு தொழில்கள்-வீட்டு முற்றங்களிலும் புழக்கடைகளிலும் நடத்தப்படும் தொழில்கள்—தாம் இந்தியத் தொழில்களுக்கு ஜீவநாடி. அமெரிக்காவிலும் இதே நிலைதான் என்ருல் வியப்பு ஏற்படும். ஆனல் அது முற்றிலும் உண்மை. சிறு தொகை முதலீடு செய்து நடத்தப்படும் இந்த சிறு தொழில்கள் அமெரிக்காவிலே 40 லக்ஷத்திற்கு மேல் இருக்கின்றன.

அமெரிக்காவில் தனியார் சுயேச்சை முயற்சிக்கு உயிர் நாடியாக விளங்குவது இத்தொழில்கள் தாம் என்பதைக் காட்டுவதுதான் யு. எஸ். சிறு தொழில்கள் கண்காட்சியின் நோக்கம்.

சென்னையில் செப்டம்பர் மாதம் முதல் தேதி இந்தக் கண்காட்சி ஐலண்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது; மாதம் முழுதும் நடைபெறும்.

அமெரிக்காவின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய வலுவையும் ஆற்றலையும் அளித்தவை சிறு தொழில்களே. ஆகையினுல் இந்தியா தொழில் வளர்ச்சிக்கு பாடுபடும் இத் தருணத்தில் இக் கண்காட்சி நடைபெறுவது பொருத்தமாக அமையும்.

"இந்தியா 1958"

புதுடில்லியில் நடைபெற்ற "இந்தியா 1958" கண்காட்சியில் தான் யு. எஸ். சிறு தொழில்கள் கண்காட்சி முதன் முதலாக நடைபெற்றது. பிறகு இவ்வாண்டுத் தொடக்கத்தில் கல்கத்தாவில் நான்கு லக்ஷம் பேர் இக் காக்ஷியைக் கண்டனர். அடுத்தபடியாக இது சென்னைக்கு வருகிறது. இங்கு முடிந்ததும் பம்பாய் செல்லும்.

கல்கத்தாவில் இந்தக் கண்காட்சி தொடங்கிய போது ஜனதிபதி ஐஸன்ஹவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது: சிறிய சுயேச்சைத் தொழில் முயற்சிகளுக்கான இயந்திரங்களும் தளவாடங்களும் இக் கண்காட்சியில் முக்கிய அம்சமாகும். இவ்வித முயற்சிகளில் முதலில் தோன்றும் ஆக்கக் கருத்துக்கள் ஒரு நாட்டின் பொருளாதார வாழ்க்கைக்குப் பெரிதும் உதவுகின்றன. இவ்விதமாக ஒரு வலுவான ஆற்றல்மிக்க பொருளாதாரத்திற்கு விரிவான அடிப்படை ஏற்பட இந்தச் சிறிய தொழில் பிரிவுகள் உதவுகின்றன.

அமெரிக்கக் கண்காட்சி விரிவான ஒரு பெரிய கண்காட்



கண்காட்சியில் சூரியசக்திப் பிரிவு. படத்தில் சூரிய சக்தி அடுப்பையும், குமுட்டி அடுப்பையும் பார்க்கலாம்.

சியாகும். இதில் இருக்கும் 20 சிறிய தொழில்களில் அமெரிக்கத் தொழில் நுட்ப அறிவு எவ்வாறு செயல்படுகிறது என்பதை, கண்காட்சிக்கு வரும் இந்தியர்கள் அனைவரும் அறிய வாய்ப்பு இருக்கிறது. உலகிலேயே அமெரிக்கா மட்டும் தனியாக நடத்தும் முதலாவது வர்த்தகக் கண்காட்சி இதுவே.

சர்வோதய இலட்சியம்

மகாத்மா காந்தியின் "அனைவருக்கும் நன்மை" என்ற சர்வோதய இலட்சியத்தை அமெரிக்கா எவ்வாறு நடைமுறையில் கடைப்பிடிக்கிறது என்பதைக் காட்டுவதே கண்காட்சியில் குறிக்கோள். அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பற்றிய விவரத்தில், அநேகமாக எப்பொழுதும் மறக்கப்படும் உண்மை ஒன்றுண்டு. பெருமளவில் உற்பத்திசெய்து குவிக்கும் பெரிய தயாரிப்பாளர், பல்லாயிரக் கணக்கான சிறு தொழில்களை நம்பியிருக்கிறார் என்ற உண்மையே இது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்கள் வளர்ச்சி முதன்மை பெற வேண்டும் என்பது மகாத்மா காந்தியின் அறக் கட்டளை. இன்று அது நிறைவேற்றப் பட்டு வருகையில் அமெரிக்கர் இந்தியர்வுக்கு உதவ முடியும்.



'டோநட்' என்ற இனிப்புப்பணியாரம் செய்யும் இயந்திரம் ஒரு நாளைக்கு 800 டஜன் பணியாரம் செய்யக்கூடியது இது.

ஏனெனில் சிறு தொழில்கள் வளர்ச்சியில் அமெரிக்காவுக்கு முன் அனுபவம் உண்டு.

சிறு தொழில்களில் பயன் படும் இயந்திரங்கள் இந்திய மக்களுக்குத் தொழில் வாய்ப் புக்களையும், வேலை வாய்ப்புக் களையும் எவ்வாறு அளிக்க முடியும் என்பதைக் கண்காட்சி காட்டுகிறது.

உதாரணமாக, சிறு தொழில் கள் கண்காட்சிப் பொருள்களில் ஒன்று, உலோகத் தகடுகளி லிருந்து பாத்திரங்கள் முதலிய அன்றாட உபயோக சாமான்க ளைச் சிறந்த முறையில் தயாரிக் கக் கூடிய யந்திரமாகும். சிக ரெட் சாம்பல் தட்டுகளுக்குள், ஒளி பிரதிபலிப்புக்கள், விளக் குத் தண்டுகள், கோப்பைகள், கோப்பைத் தட்டுக்கள் இன் னும் அநேக பொருட்களை இந்த இயந்திரம் மூலம் தயாரிக்க முடியும். இதற்கு விலை ரூ. 5000

(தொடர்ச்சி 33-ம் பக்கம் பார்க்க)

சுமதியின் சபதம்

சி. ஜெ. மார்த்தாண்டம், பி. ஏ.

மைலாப்பூரில் சுமதி ஒரு பிரபல வக்கீல் அவளுடைய பங்களாவிற்கு எதிர்பாராமல், அவளுடைய காதலன் ராஜரத்தினம் வந்து சேர்ந்தான். வந்தவன், ஏதோ மனவருத்தத்துடன் சுமதியிடம் கூறாமல், பங்களாவை விட்டுவெளியேறி விட்டான். 8 ஆண்டுகளுக்கு முன் தன் சொந்த ஊராகிய ஆறுமுகநேரியில் நடந்த சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக நினைத்தாள். ராஜரத்தினத்தின் பெரியப்பாதான் கஜபதி நாய்க்கர்; தோப்பின்மேல், கஜபதிநாயக்கர் உரிமை பாராட்டினார்; தகராறு பெரிதானது; ராஜரத்தினம் தம்பி சத்தியவேல், கஜபதி நாயக்கரைத் தடியால் தாக்கிவிட்டான்; கஜபதி நாயக்கர், உடலிலிருந்து இரத்தம் குபுகுபு என்று ஓடியது. நாயக்கர் மூர்ச்சையுற்று, படுக்கைக்கு எடுத்து செல்லப் பட்டார்.

இந்த சந்தடியில், ராஜரத்தினம் சும்தியை அடித்துவிட்டான்; சுமதி கடத்தப்பட்டாள்; சுமதியின் தகப்பனார், கண்ணப்ப முதலியார், விஷயத்தைத் தெரிந்ததும் போலிசுக்குத் தெரியபடுத்தினார்; ''சுமதி கடத்தப் பட்டாள், கட்டபொம்மன் சத்திரத்தில் இருக்கிறாள். அவளுக்கு விஷம் கொடுக்கப்பட்டது'' என்று ஒரு இளம் பெண் போனில் பேசினாள்; போலிஸ் வான் கட்டபெம்மன் சத்திரத்திற்கு பறந்தது. ஆனால், சுமதி அங்கு காணப்படவில்லை. கஜபதி நாயக்கர் உடல் நிலையின்மேல் ஒரு கண்ணோட்ட மிட்டார், சி. ஐ. டி. ராஜாங்கம். ''புரட்சி'' என்ற பத்திரிகை அவர் கையில் இருந்தது, அதில் ''மாணவி சுமதி விஷம் உண்டு. கட்டபொம்மன் சத்திரத்தில் சாவக்கிடக்கிறாள்'' என்ற செய்தியை பார்த்தார். ''புரட்சி'' பத்திரிகை ஆசிரியரும், இந்த சதியில் ஒருவனாக இருக்க வேண்டும். சுமதி தங்கமானவள், அவளுடைய மானத்துக்கு ஒரு நாளும் பங்கம் ஏற்படாது என்று மனதில் நினைத்துக்கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினார், சி. ஐ. டி. ராஜாங்கம்.

11. ரேணுகாவின் கொந்தளிப்பு !

ஒருவாறு கஜபதி நாயக்கருக்குக் கமலா உடலிலிருந்து இரத்தம் கொடுக்கப்பட்டு அவருக்கு சிறிதுகுணம் தெரிந்

த்து. உருண்டு புரண்டு படுத்தார்; ஒட்டிப்போய் இருந்த உதடுகள் சிறிது திறந்தன. ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகளை அவர் முணுமுணுத்தார்.

ரேணுகா நாயக்கர் உடல் நிலையைபார்த்து விட்டுத்தன் வீடு வந்து சேர்ந்தாள்; என்றுமே சுறுசுறுப்பாகக் காணப்படும் ரேணுகா, அன்று, வாழ்க்கையை வெறுத்தவள்போல் காணப்பட்டாள்; வழக்கம் போல் தாஜ்மகால் பூ போட்ட பனாரீஸ் பட்டுப்புடவையையும், ஊதாநிற ஜாக்கட்டையும், அவள் அணிந்தால், அவளுடையப் பொன்நிறமேனியை அவைகள் அழகுக்கு அழகு தீட்டுவதுபோல் இருக்கும்; அவளுடைய உருண்டுதிரண்ட உடலும், மருண்ட பார்வையும் பார்ப்பவர்களுக்கு அவைகள் மதுவின் போதையை ஊட்டுவதுபோல் இருக்கும். ஆனால் ஏனோ அவள் மனம் நன்கு இல்லை; முகத்திற்கு பவ்டர் தீட்டப்படவில்லை; கண்கள் மைதீட்டப்படாமல், இயற்கை கண்களாகவே அழகாக இருந்தபோதிலும், அவைகள், அவள் மன நிலையை எடுத்துக் காட்டின; எப்போதும் ரேடியோவை திருப்பிவைத்துக் கொண்டு, பாட்டில், தன்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் ரேணுகா ரேடியோவின் வாயை நன்கு மூடிவைத்திருந்தாள்.

கஜபதி நாயக்கர் உடல் நிலையைப்பற்றியோ, அல்லது சுமதி கடத்தப்பட்ட விஷயத்தைப்பற்றியோ, அவள் எண்ணவில்லை; நாயக்கர் வீட்டின் குல விளக்குமாதிரி ஒளி வீசிக்கொண்டிருந்த சுமதி கடத்தப்பட்ட விஷயம், நாய்க்கர் வீட்டிலுள்ளோர் எல்லோரையுமே பரபரப்படையச் செய்தது; ஆனால் சுமதியைப் பற்றி சிறிது கூட நினைக்காமல் ரேணுகா இருந்ததற்குக் காரணம் கமலாதான்.

சேகரிடம் தன்னுடைய உள்ளத்தை பறிகொடுத்திருந்தாள் ரேணுகா. ஆறுமுகநேரியிலுள்ள, பிரபாத் பாங்கு ஏஜெண்ட். பாஸ்கரனுடைய மகள்; அவள் ஒரு பி. ஏ. பட்டதாரி. சென்னையிலுள்ள "குவின் மேரீஸ் காலேஜ்"ஜில் தான் அவள் பி.ஏ. பட்டம் பெற்றாள்; ரேணுகா, பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னை, திருவல்லிக் கேணியில்தான்; பிரபாத் பாங்கு ஆரம்ப விழா நடந்தே, கிட்டத்தட்ட 10 நாட்கள் தான் ஓடி மறைந்துள்ளன. சேகர் வேலையில்லாமல், அலைந்து திரிந்து, கடைசியில், சென்னையிலுள்ள ரேணுகாவினுடைய வீட்டிற்கு வேலை நிமித்தம் வந்து விட்டு, ஆறுமுகநேரி வர எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் தன்னுடையபெட்டியில் ஏறும் போது தான் அவள், அவனைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவளும், அவனும் அறிமுகமானதே ஒரு பெரிய ஆச்சரியமான கதையாகும்; ஆறுமுகநேரி பிரபாத் பாங்கு ஆரம்பத்தை உத்தேசித்து, அவளுடைய தகப்பனாரை, பாங்கு ஏஜெண்டாக, மானேஜிங் டைரக்டர் நியமித்தார்; ஆறுமுகநே

ரியில், சுமார் மாதம் ரூ. 100 அளவில் வாடகைக்கு அவள் தகப்பனர் ஒரு வீடு அமர்த்திக் கொண்டார்; வீட்டிற்கு ரேணுகா வருவதற்கு முன்னதாக ரேணுகாவின் தாயார் யதுகிரி, குடியேறி விட்டாள்; ரேணுகா, சென்னையிலிருந்து வர சிறிது காலதாமதம் ஏற்பட்டது; தகப்பனர், சில முக்கிய ஜோலி, யின் நிமித்தம் சென்னையில் தங்க நேரிட்டது. ரேணுகா மட்டும் தனியாக வர வேண்டியதிருந்தது.

நாயக்கர் தாக்கப்பட்டதற்கு, 15 நாட்களுக்கு முன்தான், ரேணுகா, சென்னையிலிருந்து, ஆறுமுகநேரிக்கு வந்து சேர்ந்தாள்; அன்று, ஆறுமுகநேரி வர, சென்னையிலிருந்து புறப்படத் தயாராக நிற்கும் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் அவள் ஏறி விட்டாள், எக்ஸ்பிரஸும், சென்னை, எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து புறப்படத் தயாராகி விட்டது.

அன்று பேய்மழை பெய்ய ஆரம்பித்தது. ஜனங்கள், நெரித்துக்கொண்டு, எழும்பூர் ரயில்வே ஸ்டேசனுள் நுழைந்தார்கள். திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் கரும்புகையை அள்ளி விட்டுக்கொண்டிருந்தது. எக்ஸ்பிரஸ் புறப்பட தயாராகி விட்டது என்பதை, பிளாட்பாரத்தில் நின்ற பிரயாணிகள், நெரித்துக்கொண்டு வண்டியில் ஏறிய வண்ணமாக இருந்தது நன்கு காட்டியது. எக்ஸ்பிரஸில் திருச்செந்தூர் பெட்டியில் ரேணுகா உட்கார்ந்திருந்தாள்; மழையோடு சேர்ந்து வீசிய

காற்று, அவளுடைய மயிர்க் கற்றைகளை நெற்றியில் பரப்பி, அவளை அழகு ஓவியமாக ஆக்கிக் கொண்டிருந்தது, ரயில்வே "கைடை" திருப்பிப் பார்த்தாள். பிறகு ஒரு ஆங்கில வார இதழை திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டாக்ஸியில் சேகர் வந்து இறங்கினன்; முகத்தில் படிந்திருந்த மழைத்துளிகளை, கைக்குட்டையால் நன்கு துடைத்துக் கொண்டு, அவசர அவசரமாக, "இந்தாக் கூலி, லக்கேஜ்களை, இந்த பெட்டியில் ஏற்று சீக்கிரம்.........வண்டிபுறப்பட இன்னும் 2 நிமிடங்கள் தான் இருக்கின்றன." என்று திருச்செந்தூர் என்ற போர்டு மாட்டப் பட்டிருந்தப் பெட்டியைக் காட்டினன்; வண்டியிலிருந்த அவள் தன்னுடைய பெட்டியில் ஏறவரும் வாலிபன் மீது ஒரு கண்ணோட்டம் விட்டாள்: முதல் முதலாக அப்போது தான், ரேணுகா சேகரை பார்த்தாள். பாண்ட், கோட்டேர்டு டிப்டாப் பேர்வழியாக சேகர் அப்போது காட்சி அளித்தான், மூக்கில் மாட்டப்பட்ட கண்ணடியை கழட்டி, அக்கண்ணடியில் படிந்திருந்த மழைத்துளியை துடைத்துவிட்டு, திரும்பவும், மூக்கில் கண்ணடியை அவன் மாட்டுவது ஒரு தனி அழகாக இருந்தது.

பெட்டி, தோல்பை, எல்லாம் வண்டியில் ஏற்றியாகிவிட்டது. சேகரும் அவள் பக்கம் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள். என்னுடைய பையை உயரே தூக்கி வைத்து விடுகிறேன்" என்ருள் ரேணுகா.

"இல்லேங்க, பரவா இல்லே... உங்களுக்குக் கஷ்டம் கொடுத்து விட்டேன்".

"என்னங்க இதெல்லாம் கஷ்டமா?"

அவள் சேகரை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கும் போது, சுமார் 50 வயதுடைய ஒரு பிச்சைக்காரன் சேகரிடம் ஓடிவந்தான். அவன் முகமெல்லாம், தாடியும், மீசையும், படர்ந்து, அவன் முகம் ஒரு காடுபோல் தெரிந்தது. ஒரு கந்தல் துணி அவன் உடலில் ஒட்டிக்கொண்டிருந்தது; பரட்டைத் தலை, மயிர்கள் ஒன்றுக்கொன்று பின்னிக்கொண்டு சடை விழுந்திருந்தது.

"அப்பா சேகர்" அந்த உருவம்.

"என்னப்பா" என்ருன் சேகர் பாசம் தோய்ந்த குரலில்.

"இதோ கொஞ்சம் சுண்டல் இருக்கிறது. கொஞ்சம் எடுத்துக் கொள்ளப்பா?"

சேகர் முகத்தில் சொல்ல முடியாத துயரக் கோடு விழுந்தது. அவன் உள்ளம் ஆலையில் கொடுக்கப்பட்ட கரும்பு போல் பிழியப்பட்டது. அவன் ரேணுவின் முகத்தையும், அந்த வயோ

திகர் முகத்தையும் மாறி மாறி பார்த்துவிட்டு "அப்பா கொண்டாங்கப்பா, சாப்பிடுகிறேன்" என்றான். அந்த உருவம், சேகர் தலையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால், அவன் வாயில் சுண்டலை திணித்தது.

ரேணுகாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஆளைப்பார்த்தால் டிப்டாப்பாக இருக்கிறார்; நன்றாக படித்தவர்போல் அவர்முகக்களை கூறுகிறது. போயும் போயும் ஒரு பிச்சைக்காரனிடம் சுண்டல் வாங்கிசாப்பிடுகிறாரே ஏன்? ஒருவேளை அவன் பிச்சைக்காரனாக இருக்கமாட்டான்! இருந்தாலும் கூட, இவ்வளவு கூட்டத்தின் மத்தியில் சுண்டலை எப்படி வாங்கிச் சாப்பிட மனம் வந்தது. அந்த பிச்சைக்காரன், வாலிபன் தலையை பிடித்து அன்போடு அவனுக்கு சுண்டலை வாயில் திணிக்கிறானே என்று யோசித்துக்கொண்டு ஆச்சரியமான ஒரு பார்வையை அவர்கள் மேல் விட்டாள் அவள். ஏனோ அவளுக்கு சேகர் மேல் ஒரு தனி அலாதிபிரியம் ஏற்பட்டு விட்டது. அவனுடைய மூக்கும் விழியும் அவளை நன்குகவர்ந்து விட்டது என்பது, அவள் ஓரக் கண்பார்வை நன்கு எடுத்துக் காட்டியது.

வண்டியும் புறப்பட்டு விட்டது. அந்த பிச்சைக்கார உருவம், வண்டி புறப்பட்டதும் சேகரை பார்த்த வண்ணமாக கையை அசைத்தது. சேகரும் புட்போர்டில் நின்றுகொண்டு, கண் பார்வை மறையும் வரைக்கும் அந்த உருவத்தை பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சேகர் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, தன்னுடைய சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டான். அவனுடைய பார்வை ரேணுகாவின் மேல் விழுந்தது. ரேணுகா எதையோ வாசிப்பதுபோல், பாவனை செய்தாலும்கூட, அவளுடைய எண்ணங்கள் அத்தனையும் சேகரைப்பற்றிதான் நினைக்கின்றன என்பது, அவள் அடிக்கடி சேகரை பார்த்த பார்வை நன்கு எடுத்துக் காட்டியது.

இரண்டு பேர் விழிகளும் பேசின: ஆனால் வாய்கள் திறக்கவில்லை. சிறிது அமைதி ஏற்பட்டது.

"கொஞ்சம் மன்னித்து விடுவீர்களா, சிகரெட்டு பிடிக்கப் போகிறேன்...ஆமாம் எனக்கு அது ஒரு பெரிய பைத்தியம்... உங்களுக்கு சிறிது சங்கடமாக இருக்கும்" சேகர் பேச ஆரம்பித்தான்.

"ஓ, எஸ், பிடியுங்களேன். அதற்கு என்ன..." என்றாள் புன்முறுவலுடன்.

எக்ஸ்பிரஸூம் தாம்பரம் வந்து சேர்ந்து விட்டது: இதற்குள், 2 பாக்கட் சிகரெட்டை ஊதித் தள்ளிவிட்டான் சேகர்; பெட்டி முழுவதும் புகை மயமாக இருந்தது: ரேணுகாவுக்கு சிறிது வெறுப்பு ஏற்பட்ட போதிலும், அவனை பார்த்துக் கொண்டிருப்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சி, வெறுப்பை இருந்த

பல் வியாதிகளை பறந்தோடச் செய்யும்

டாக்டர் கோட்டீஸ்

முயல் மார்க் பயோரியா பற்பொடி

ரிஜிஸ்டர்ட்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்

DR.KOTI'S PYORRHEA TOOTH POWDER

டாக்டர் கோட்டீஸ்

இண்டியன் கெமிக்கல் ஒர்க்ஸ், சென்னை-5

போலிகள் ஜாக்கிரதை!

நெம்பர்களைக் கண்டு ஏமாறுதீர்கள்.

இடம் தெரியாமல் துரத்தி அடித்து விட்டது.

எழும்பூர் ரெயில்வேஸ்டேசனில் காணப்பட்ட பிச்சைக்காரன் யார் என்று கேட்கலாமா? கேட்டால் என்ன நினைப்பார்......அதுவும் முன்னே பின்னே தெரியாத ஒருவரிடம் அவர் சொந்த விஷயத்தைப்பற்றி எப்படி கேட்பது ... கேட்டால், பதில் கொடுத்து விட்டால் நல்லது— ஒன்றும் கூறுமல் இருந்து விட்டால்? இப்படியாக, மனதில் போராட்டம் நடந்தது அவளுக்கு;ஒருவாறு எப்படியும் கேட்டு விட வேண்டுமென்று மனதை பக்குவப் படுத்திக்கொண்டாள்.

"ஏங்க ஒன்று கேட்கிறேன் வருத்தப்படமாட்டீர்களென்று நினைக்கிறேன்" என்று அவள் பேச ஆரம்பித்தபோது அவள் கன்னங்கள் ஆரஞ்சு பழம்மாதிரி சிவப்பாகி விட்டன.

"கேளுங்கள், நான் ஏன் வருத்தப்படப் போகிறேன்" என்று அவளிடம் பேச ஆசை கொண்டவன் மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டு அவள் பக்கம் திரும்பினான் சேகர்.

"இல்லை..."

"என்னங்க... இல்லை என்று நிறுத்தி விட்டீங்க"

"எழும்பூர் ஸ்டேஷனில்......',

"........."

"எழும்பூர் ஸ்டேஷனில், ஒரு வயோதிகர் காணப்பட்டாரே... அவர்?"

"அது ஒரு பெரிய கதை; நான் கூறுகிறேன்; உங்கள் பெயரை நான் கேட்கலாமா?"

"ரேணுகா... உங்கள் பெயர்?"

"சேகர்......நீங்கள் எங்கு செல்லுகிறீர்கள்?"

"ஆறுமுநேரி... அங்கு பிரபாத் பாங்கு ஒன்று புதிதாக திறந்து இருக்கிறார்கள். என் தகப்பனார் பாஸ்கர்தான் அதன் ஏஜெண்ட்; நான் அங்குதான் போகிறேன்... நான் "குவின் மேரிஸ் காலேஜில்" பி. ஏ. படித்தேன். ஒருவாறு பட்டம் எடுத்து விட்டேன்.

"என்னங்க ஆறுமுக நேரிக்கா... நீங்கள்... மிஸ்டர் பாஸ்கரன் மகளா? நான் அவரிடம் வந்து விட்டுத் தானே ஊர் திரும்புகிறேன். நான் ஆறுமுக நேரியில்தான் இருக்கிறேன். நான் அவரை பார்க்கத்தான் சென்னையிலுள்ள திருவல்லிக் கேணிக்கு வந்தேன். அங்கு நீங்கள் காணப்படவில்லையே. வேலை விஷயமாகத்தான் அவரை பார்க்க வந்தேன்... நான் ஒரு பி. காம் பட்டதாரி"

"என் தகப்பனாரிடமா வந்தீர்கள். எங்கள் வீட்டிற்கு வந்தீர்களா? நான் அப்போது அங்கு இல்லை. என் சிநேகிதிவீட்டிற்குச் சென்றிருக்கலாம்... உங்களுக்கு வேலை வேண்டுமா? நான் என் தகப்பனாரிடம் சொல்லி ஆவன செய்கிறேன். அவர்கூட ஆறுமுகநேரியை சேர்ந்த ஒருவருக்குத் தான் ஹெட்கிளார்க் வேலை கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்" என்றாள் ரேணுகா; அவள் பேச்சில் குழைவு இருந்தது.

"ஆமாங்க...ஏதோ செய்யுங்கள்".

"உங்களுக்கு கஜபதி நாயக்கர் தெரியுமா? ஊரில் நல்ல செல்வாக்குள்ளவராமே. அவருக்கும் என் தகப்பனாருக்கும் நெருங்கிய நட்பு உண்டு. சென்னைக்கு வந்தால், எங்கள் வீட்டில் தங்காமல் போகமாட்டார்".

"கஜபதி நாயக்கரா... அவர் என்னுடைய மாமாதான்... அவர் தங்கைமகன்தான் நான்; அவரோடுதான் அவர் வீட்டில் நான் தற்போது இருக்கிறேன்"

"பிறகு என்னங்க... உங்களுக்கு வேலை கொடுக்க கேட்கவா செய்யணும்".

"வேலை உங்கள் தகப்பனார் மிஸ்டர் பாஸ்கரன் கொடுக்கி

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. 5.)

A·C,C CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பணவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

றேன் என்று கூறிவிட்டார்... சரி இனி, ஊர் வரைக்கும் பேசி கொண்டே போகலாம்".

இப்படியே பேச்சு ரொம்ப ரசமாகப் போய்க்கொண்டிருந்தது. இடையில் ரேணுகா பேச ஆரம்பித்துவிட்டாள். எக்ஸ்பிரஸும் திருச்சி வந்து சேர்ந்துவிட்டது.

"எழும்பூரில்...அந்த பிச்சைக்காரனைப் பற்றி ஒன்றும் கூற வில்லையே" என்று பேச்சை பிச்சைக்காரன் பக்கம் திருப்பினாள் ரேணுகா.

சேகர் பேச ஆரம்பித்தான். கஜபதி நாயக்கர் என் மாமா தான். நான் அவரைப் பற்றி என்ன கூறமுடியும். அவர் தங்கை கல்பூர்னியாவின் மகன் தான் நான்: நான் பிறந்ததும் என் தாயார் இறந்து விட்டார். என் சொந்த ஊர் மதுரை: என் தாய்க்கு, நான் பிறந்ததும், உடல் நிலை ரொம்ப கெட்டுவிட்டதாம். என் தகப்பனார், அம்மாவை நாயக்கர் வீட்டில் விட்டு விட்டார்; எத்தனையோ டாக்டர்கள் வந்து பார்த்தார்களாம். கடைசியில் ஒன்றும் முடியவில்லை. தாய் என்னை அனாதையாக விட்டுவிட்டு இறந்துபோய் விட்டாள். அவள் சாவும்போது நகைகள் மட்டும் 20000 ரூபாய்க்கு மதிப்பு இருந்ததாம். எல்லாவற்றையும் நாயக்கர் எடுத்துக் கொண்டார்; என் தகப்பனார் ஒரு ஷாப் வைத்திருந்தாராம். ஒரு காலத்தில் அவர் பணக்காரர். அம்மாவின் நோயை ஷாப்பை விற்று பார்த்தார். கையில் வைத்தி

ருந்த மீதி ரூபாயையும் என் மாமா கஜபதி நாயக்கரிடம் தான் கொடுத்திருந்தாராம். நாயக்கர், அம்மா நகைகளையும் அப்பா கொடுத்த ரூபாயையும் எடுத்துக்கொண்டார். அப்பா எவ்வளவோ கேட்டும் கொடுக்க மறுத்துவிட்டார். காலப்போக்கில் அப்பாவின் நிலைமாறியது. வாழ்க்கை வெறுத்தது... அமைதிக்காக ஊர் ஊராக அலைந்து திரிந்தார். அவர் கால் படாதகோயில்கள் இல்லை என்னலாம்...சில ஆண்டுகள் கழிந்தன. மூளையில் கோளாறு ஏற்பட்டது; தெருத்தெருவாக அலைகிருர். அடிக்கடி "என் குடும்பம் நொறுங்கியது, என் பணம் பாழானது"என்று கூறுகிருர்; எழும்பூர் ரயில்வே நிலையத்தில் நீங்கள் பார்த்தது என் தகப்பனுர் தான். அவர் பெயர் தான் குமாரசுவாமி. அவர் இப்படியே அலைகிருர் எழும்பூர் ரயில் நிலயம், மயிலாப்பூர் கபாலிஸ்வரர் கோயில், வட பழநி முருகன் கோயில்; பழநி முருகன் கோயில், ஆகிய இடங்களில் அவரை பார்க்கலாம். அவரை எங்கு அழைத்து வைத்தாலும், தெரியாமல் இப்படி ஓடிவிடுகிருர்.இதற்குக் காரணம், என்மாமா கஜபதி நாயக்கர் தான்; அவருடைய கொடுமையான செய்கைதான் என் தகப்பனுரை இந்த நிலைக்குக்கொண்டு வந்துவிட்டது" என்று அழாக் குறையாகச் சொல்லி முடித்தான் சேகர்.

"ஐயோ, அது உங்கள் அப்பாவா" என்று சேகர் மீது பரிதாபப்பட்டாள் ரேணுகா. பைத்தியம் ரூபத்தில் இருந்தால்கூட தகப்பனுக்குத் தன் பிள்ளை மேல் ஏற்பட்டப் பாசம் போகவில்லையே என்று அவள் நினைத்தாள்.

இப்படியாகத்தான், சேகருக்கும் ரேணுகாவுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. இரண்டு பேரும், ஆறுமுகநேரிக்கு வந்து சேரவும் நன்கு பழகி விட்டார்கள். ஒருவாறு, ரேணுகாவின் சிபார்சின் மேல், பிரபாத் பாங்கின் ஹெட் கிளார்க் வேலை, சேகரைத்தேடி வந்தது. ரேணுகாவும், கஜபதி நாயக்கர் வீட்டுக்கு அடிக்கடி வர ஆரம்பித்தாள்; காலப்போக்கில், கமலாவின் நெருங்கிய தோழியாகி விட்டாள் ரேணுகா; அன்று பாங்கிலிருந்துசோர்ந்து வீட்டுக்குள் நுழைந்த போது தான், கமலா மகிழ்ச்சியோடு அவனிடம் ஓடி வந்தாள்.

"கஜபதி நாயக்கரின் கொடுமையான செய்கைகளால் தான் தன் தகப்பனுர் இந்த நிலக்கு வந்தார்" என்று, அன்று, ரயிலில் வரும்போது சேகர் சொன்னுரே. சேகர் தகப்பனுர், பைத்தியம்போல் திரிவதற்கு மூலகாரணம் கஜபதி நாயக்கரென்றும், சேகர் தாயின் நகைகளையும், பணத்தையும் நாயக்கர் ஏப்பம் விட்டு விட்டதாக, சேகர் அன்று கூறியதை ஞாபகப் படுத்தி பார்த்தாள் ரேணுகா. அப்படிப்பட்ட பயங்கர மனிதர் வீட்டில் ஏன் சேகர் தங்க வேண்டும்? நாயக்கர்மேல், சேகருக்குச் சொல்ல முடியாத வெறுப்பு இருக்கிற தென்பது தெரிகிறது. அப்படி இருந்த போதிலும் நாயக்கர் வீட்டில்

221, Pilliar Koil Street,

MADBAS-3

2/21, பிள்ளேயார் கோயில் தெரு,

சென்னே-3

தங்குவதின் நோக்கமென்ன? பாம்பும், கீரியும் எப்படி ஒரே இடத்தில் வாழமுடியும். அப்படியானல், பாம்புக்கும், கீரிக்கும், பிரியமான ஒன்று இருக்க வேண்டுமல்லவா. ஆம் அது தான் கமலா. கமலா இல்லாவிடில் சேகர் நிச்சயமாக, நாயக்கர் வீட்டில் இருக்கமாட்டார்; சேகருக்கும்...கமலாவுக்கும் காதல் ஏதாவது இருக்கவேண்டும். அல்லாவிடில், சேகர், வீட்டிற்குள் வந்ததும் வராததும், நான் தேங்காய் வெட்டி வருகிறேன். அத்தான் சோர்ந்து காணப்படுகிருள் என்று குதிபோட்டுக்கொண்டு கமலா, விளையாட்டைக்கூட பொருட்படுத்தாமல் சேகரிடம் ஒடுவானேன். ஆனல் அதற்குப் ஒன்றுமே சேகர் பதில் சொல்லவில்லையே. கமலாவின் களிப்புக்குத் தகுந்த எதிரொலி, சேகர் முகத்தில் காணம்படவில்லையே. சேகருக்குப் பணம் வசதியில்லாததால்,ஏன் நாயக்கர் வீட்டில் இருந்து இருக்கக்கூடாது? இப்போது தான்,பாங்கியில் ஹெட்கிளார்க் வேலை பார்க்கிருரே. மாதம் ரூ 300 வரை கிடைக்குமே. சேகர் மனநிலை ஒன்றும் தெரியவில்லையே;சேகர் முகத்தில் எப்போதும் சோகத்தின் சாயல் காணப்படுகிறது! பாவம்! தன்னுடைய தகப்பனரின் அவலநிலையை நினைத்து நினைத்து வருத்தப்படுவார். எப்படியும் சேகரிடம் மனம் விட்டுப்பேச வேண்டும். சேகரை கணவராகக் கொண்டால், தன் வாழ்க்கை எவ்வளவு சுவையாக இருக்கும். இதற்குக் கமலா முட்டுக்கட்டையாக இருப்பாள் போல் இருக்கிறதே. என்று நினைத்துக்கொண்டு, உள்ளம் குமுறிக்கொண்டிருந்தாள் ரேணுகா.

12. சுமதி மீட்கப்பட்டாள்?

முதலியார் சுமதியைத்தேடி அலேந்து திரிந்துவிட்டு, விடியற்காலம் சுமார் 4 மணிக்கு வீடுவந்து சேர்ந்தார். சுமதி இல்லாத வீடு விறிச்சோடிபோய் இருந்தது. வந்ததும் வராததுமாக, விளக்கேற்றினர். விளக்கொளியில் சுமதி படுத்திருந்த படுக்கை விரித்தவாறு கிடந்தது தெரிந்தது. தலையணையை

எடுத்து, அதன்கீழ் ஏதாவது வைக்கப்பட்டுள்ளதா என்று பார்த்தார், ஜமக்காளத்தை எடுத்துவிட்டு நன்கு துருவி பார்த்தார்; ஒன்றும் கிடைக்கவில்லை; விளக்கை எடுத்துக் கொண்டு சுமதி அறையினுள் சென்ருர். அவள் மேஜைமீது அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் சிதறிக்கிடந்தன. அவளது கணக்கு நோட்டு விரித்துவைக்கப் பட்டிருந்தது, அதன் நடுவிலுள்ள இரண்டு காகிதங்கள் கிழிக்கப் பட்டிருந்தன. பவுண்டன் பேஞ மேஜைமீது கிடந்தது. பேஞ மூடாமல் இருந்தது. பவுண்டன் பேஞவின் மைத்துளிகள் சொட்டு சொட்டாக காகிதத்தின் மேல் விழுந்திருப்பதைப் பார்த்தார்; திடீரென்று மேஜையின் அடியில் அவர் கவனம் சென்றது. கிழிக்கப்பட்டதுண்டு துண்டு காகிதங்கள் சிதறிக் கிடந்தன. ஒரு காகிதம்மட்டும் கையால் கசக்கப்பட்டு கீழே கிடப்பதை அவர் பார்த்தார். அவசர அவசரமாக அதை விரித்து பார்த்தார்.

"நான் சாவதற்குயாரும் காரணம் கிடையாது. வாழ்க்கையில் ஒரு நாளும் இல்லாத வெறுப்பு இன்று ஏற்பட்டது; வாழப்பிரியமில்லை, உலகத்தில் சொல்லமுடியாத வெறுப்பு தான் நான் சாவதற்குகாரணம்; என் சாவுக்கு என்னைத் தவிர வேறு ஒருவரும் காரணம் கிடையாது என்பதைக் கூறிக் கொண்டு, என்றும் அமைதி கொடுக்கும், சாவை நான் மனமுவந்து அணைத்துக்கொண்டேன்" லெட்டரை பார்த்து திக்பிரமை அடைந்தார் முதலியார்.

"இனி இறந்துபோய் விடுவது தான் மேல்; சுமதியே என்னை விட்டுப் பிரிந்து போய் விட்டாள். உலகில் வாழ்வதற்கு ஒன்றுமில்லை. யாருக்காக, இந்த உலகில் இந்த உடலைத் தூக்கிக்கொண்டு அலைந்தனே அந்த சுமதி, என்னை பரதவித்து,துடிதுடிக்கத் தெருவில் விட்டுவிட்டாள்" என்று மனதில் நினைத்துக் கொண்டு, நிலை தடுமாறி தளர்ந்துபோய் வீட்டிலிருந்தார் முதலியார்.

என்ன ஆச்சரியம்! அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. ஆம் சுமதி, வீட்டில் கொல்லைப்புறமார்க்கமாக, வீட்டிற்குள் வந்து சேர்ந்தாள்! அவள் முகத்தில் துக்குக்குறி ஒன்றும் காணப்படவில்லை; ஏதோ, ஊட்டிக்குச் சென்று திரும்பியவள் மாதிரி அவள் உடலில் ஒருதனி அழகு தெரிந்தது. ஆச்சரியத்தால், முதலியார் கண்களும், வாயும், அகல விரிந்தன; "சுமதி... சுமதி... நீ எங்கம்மா சென்ருய்...என்ன நடந்தது...உன் அப்பாவிடம் எல்லாவற்றையும் சொல்லம்மா!" என்று கூறிக்கொண்டு, தன் அருமை மகளைத்தழுவி, உச்சி முகர்ந்தார் முதலியார். அவர் உடலில் ஒரு தனி தெம்பு ஏற்பட்டது.

(தொடரும்)

இன்னெருவனின் அனுமதியின்றி அவனை ஆள எந்த மனிதனும் தகுதியுடையவன் அல்ல.—லிங்கன்.

குடுமியா? கிருப்பா?

டாக்டர் பி.எஸ். சின்னசாமி
பி.எஸ்.ஸி; எம்.பி.பி.எஸ்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அன்று கூட்டமே யில்லை. ஒரு சிலரே யிருந்தனர். பூஜை என் கண்களுக்கு வெகு விசேடமாய்த் தோன்றியது. என் மனம் புளகாங்கிதமடைந்தது. பூஜை முடிந்ததும் அன்று போல் இன்றும் நுழைந்தேன். நான்தான் கடைசி, அன்று என்னை திருப்பியனுப்பியவரே இன்றும் நின்றிருந்தார்.

"மாமா" என்றேன்.

புன் சிரிப்புடன் என்னைப் பார்த்தார்.

"நீங்கள் போன வாரம் என்னை கொசுவம் வைத்து புடவை கட்டிக்கொண்டு மூக்குத்திக் கொண்டுவரச்சொல்லி திருப்பி யனுப்பி விட்டீர்கள். நான் அப்படியே செய்துகொண்டு வந்துவிட்டேன்," என்றேன்.

அவருக்கு வியப்பும் சந்தோஷமும் தாங்க முடியவில்லை. அப்படியே என் கையைக் குழந்தையைப் பிடிப்பதுபோல் பிடித்து ஸ்வாமிகள் முன் கொண்டு நிறுத்தி நடந்ததைச் சொன்னார். நான் நமஸ்காரம் செய்தேன். அவர் என் கையில் குங்குமப் பிரசாதம் கொடுத்தார். திடீரென்று எனக்கு எப்படித்தான் வந்ததோ தெரியவில்லை. விக்கிவிக்கி அவர்கள் முன் அழ ஆரம்பித்து விட்டேன்.

ஸ்வாமிகள், "ஏனம்மா அழுகின்றாய்? மஹா லக்ஷ்மிபோல் உள்ள உனக்கு ஒரு குறைவும் வராது," என்றார்.

"என் கணவர் கிருப் வைத்துக் கொள்ளவில்லை. குடுமி தான் வைத்துள்ளார். நான் சொல்லியும் குடுமியை மாற்றிக் கொள்ள மறுத்து விட்டார். அதனால் நான் அவரைப் பிரிந்துவிட்டேன்," என்று சொல்லி விக்கினேன்.

புன்னகையுடன் அவர், "குழந்தாய் உன் கணவன் அதிமேதாவியாயிருக்கவேண்டும். தன் கொள்கைக்காக மனைவியைக் கூட இழக்கத் துணிந்தவனை அடைந்த நீ ஒரு பாக்கியசாலியம்மா, என்ருர்.

சிகை வைக்கிறது என்பது பரமேசுவரனுக்கு முன்பு சிகை வைத்துக் கொள்ளுகிறேன் என்று கூறி மந்திரபூர்வமாகச் செய்யும் ஒரு காரியம். கடவுளுக்கு அர்ப்பணம் செய்து சிகையை மந்திரங்கள் சொல்லி பிறகு எடுக்கவேண்டும். அப்படி வைக்கப்பட்ட சிகையை மனம் கூறுகிறபடி கிள்ளுக்கீரைபோல் எடுப்பது பரமேசுவரனிடத்து எடுத்துக்கொண்ட வாக்கை மீறுவது போல் ஆகும்.

மேலும் மணமானபின் சில காலம் பிருமச்சர்யம் அனுஷ்டித்த பிறகே இல்வாழ்க்கையில் ஈடுபட வேண்டும்.

இப்பொழுது உன் மனம் தேவியின் அருளால் மாறிவிட்டது என்று தெரிகிறது. அம்பாளின் அருளால் அவரை நீ சீக்கிரம் அடைவாய். நல்ல இல்வாழ்வு உன்னை வந்து அடையும். ஸத்ப்ரஜைகளுக்குத் தாயாவாய்" என்று மீண்டும் அம்பாளைத் தியானித்து குங்குமம் அளித்தார். அவரை மீண்டும் நமஸ்கரித்துவிட்டு வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டேன். என் மனத்திலிருந்து ஒரு பெரிய சுமை இறக்கப்பட்டது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

வீட்டிற்கு வந்து மாற்றுப் புடவை உடுத்திக் கொண்டேன். தபால்காரன் எனக்கு ஒரு ரெஜிஸ்தர் கடிதத்தைக் கொடுத்துச் சென்ருன். அதை பட படக்கும் உள்ளத்துடன் பிரித்தேன். அம்மா என் எதிரில் வந்து, "யாருடி...மாப்பிள்ளையா?" என்று கேட்டாள்.

ஆம் அவர்தான் ஒரு வருடம் கழித்து இன்றுதான் எழுதியிருக்கிருர்.

அன்புள்ள குந்தளா,

உனக்கு இவ்வளவு நாளாய் எழுதாதற்கு என்னை மன்னித்துக்கொள் என்று நான் எழுதுவது அழகில்லை. முறையுமில்லை. உனக்கும் நான் அப்படி எழுதினல் பிடிக்காது, அல்லவா?

நானும் என் பள்ளி மாணவர்களும் போனவாரம் குற்ருல நீர் வீழ்ச்சிக்கு உல்லாசப் பிரயாணம் சென்ருேம். அங்கு மலைமேல் உள்ள தேனருவிக்கு நானும் இன்னும் இரண்டு உபாத்தியாயர்கள் மட்டுமே சென்ருேம். ஒரு இடத்தில் ஒரு பாறையைத் தாண்டும் பொழுது என் கால் பாசியில் வழுக்கிவிட்டது. விழுந்திருந்தால் இன்று இக்கடிதத்தை எழுத நான் இருந்திருக்கமாட்டேன். அதிர்ஷ்டவசமாக என் சிநேகிதர் எம்பி என்னைப் பிடிக்கக் கையை நீட்டினர்.

அதிர்ஷ்டவசமாக உன்னல் வெறுக்கப்பட்ட அது...என் கட்டு குடுமி அவர் கையில் பிடிபட்டது. என்னைக் குடுமியைப்



பிடித்து இழுத்தே விட்டார். கீழேவிழுந்த நான் காப்பாற்றப் பட்டேன். அதுவே கிருப்பாக விருந்திருந்தால் அவர் கைக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்காது. ஆனால் அவர் இழுத்த இழுப்பில் என் மயிர் சிடுக்காய் விட்டது. சிடுக்கையெடுக்க என்னால் முடியவில்லை. மேலும் நம்மைப் பிரித்து வைத்திருப்பதும் இதுதான். ஒரு பிடிவாத உணர்ச்சியால் இதுவரை உன்னைப் பிரிந்து காலம் கழித்து விட்டேன். யாராவது ஒருவர் விட்டுக்கொடுக்கா விட்டால் வாழ்க்கையில் இனிப்பு ஏது? உன்னைப்பற்றி ஏங்காத நாள் இன்றுவரை இல்லை. "உங்கள் மனைவியின் மாங்கல்ய பலம் தான் தப்பித்தீர்கள்," என்று எல்லோரும் கூறுகின்றனர். என் பிடிவாதம் தளர்ந்து விட்டது. ஆகவே, நாளை ஞாயிறுக்கிழமை காலை நம்மிடையே பிளவையுண்டு பண்ணிய அதை கத்தரித்து விடப் போகிறேன்.

இனியும் என் வாழ்வை வளம்பெறச் செய்வது உன் கடமை.

உன் அன்புள்ள

"S. ரவி"

என் உடம்பு புல்லரித்தது.

"என்னடி எழுதியிருக்கிறான்?" என்றாள் அம்மா அப்படியே அம்மாவை குழந்தை போல் கட்டிக் கொண்டேன். அவள் காதோடு "அவர் என்னை வரச்சொல்லியிருக்கிறார்" என்றேன்.

ஒரு தந்தி பாரத்தை எடுத்து, "தயவு செய்து வெட்டக் கூடாது. அம்மாவும் நானும் இன்று இரவு ரயிலில் புறப்படுகிறோம்" குந்தளா ஸப்தரிஷி என்று எக்ஸ்ப்ரஸ் தந்தி அடித்தேன். அவருக்கு எங்கே இது போகாமல் இருந்து விடுமோ என்று ஒரு போனோகிராமும் கொடுத்தேன். எனது ஆறுகஜப் புடவைகளையெல்லாம் கனகாவிற்குக் கொடுத்து விட்டேன். புடவைக் கடைக்கு கார் பறந்தது. விலையுயர்ந்த பட்டில் ஒன்பது கஜப்புடவைகள் சிலவற்றை வாங்கிக் கொண்டேன். அப்பா ஊரில் இல்லை. அதனால் அம்மாவுடனும் கனகாவுடனும் அன்று இரவே ரயிலேறி விட்டேன்.

எங்கே என் தந்திகள் தக்க சமயத்தில் போய்ச்சேராமல் இருந்து, குடுமியை எடுத்து விடுவாரோ என்று கவலையுடன் ஊர் வந்ததும் ரயிலிலிருந்து எட்டிப்பார்த்தேன். நல்லவேளை அவர் கிருப்தலையுடன் தோற்றமளிக்கவில்லை. அம்மா எதிரில் ரயிலடியில் அவருடன் பேச எனக்கு நா எழவில்லை. வீட்டிற்குப் போகும் வழியெல்லாம் அம்மா நாங்கள் அவசரமாய் புறப்பட நேர்ந்ததால் சீர்வகை ஒரு சரியாய் சித்தம் செய்ய முடியவில்லை என்று என்னமோ சொல்லிக்கொண்டே வந்தாள், கனகாவும் என்னைவாய் திறக்க முடியாமல் அத்திம்பேரைத் தன் கேள்விகளால் துளைத்துக் கொண்டு வந்தாள்.

அன்று இரவு. கால்களில் உருட்டு. மூக்கில் புல்லாக்கு ஒரு மூக்கில் மூக்குத்தி...மற்றொன்றில் பேசரி. கொசுவம் வைத்து மிகவும் அழகாக நானே கட்டிக்கொண்ட புது பதினெட்டு முழ புடவை சலசலக்க, வைர முகப்பு வைத்த ஒட்டியானம் என் சிறிய இடையை இன்னும் சிறிது பண்ண, நெற்றியில் சற்று அகலமாகவே இடப்பட்ட குங்குமத்துடன், கையில் வெள்ளிச் செம்பில் பாலுடன் எங்கள் ப......அறைக்குள் நுழைந்தேன்.

அவர் அன்றுபோல் இன்றும் ஆர்வத்துடன் எழுந்தார். சட்டென்று அவரை நமஸ்கரித்துவிட்டேன். என்னை அப்படியே தூக்கி நிறுத்தினார். என்னைத் தலையிலிருந்து பாதம் வரை நோக்கினார் அப்பப்பா அந்தப்பார்வையின் வேகத்தில் தலை குனிந்தேன்.

அன்புடன் அவர், "என்ன ஒரே கர்நாடகமாயிருக்கிறதே மேக் அப்," என்று என்னை அணிகினார்.

"உங்களுக்கு எது பிடிக்கிறதோ அதுவே எனக்கு நவீனம்," என்று அவர் பிடியில் சிக்கிக் கொண்டேன்.

(முற்றும்)

நீடித்தகாலம் வாழ்வது முக்கியமன்று, எவ்வாறு வாழ்வது என்பதே முக்கியம்.

—பெய்லி.

பொடிகளில் சிறந்தது எது?

ரீஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல் நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா
பவுன்கலர் & ஆபீஸர்
பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12. T. H. ROAD. MADRAS-21.

புகையிலை சாகுபடி!

சென்னை மாநிலத்தில் 1958-59ல் புகையிலை சாகுபடி பற்றிய அறிக்கையாவது:—

1959 பிப்ரவரி கடைசி வரை சென்னை மாநிலத்தில் புகையிலை பயிர் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு சுமார் 33,600 ஏக்கர். முந்தின ஆண்டில் புகையிலை பயிரிடப்பட்ட பரப்பளவு 44,600 ஏக்கர் என்பதுடன் ஒப்பிடும்போது இது 22·9 சதவிகிதம் குறைவாகும். 1957-58 உடன் முடிந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றுக்கு சராசரி புகையிலை பயிரிட்ட பரப்பளவு 44,900 ஏக்கர் என்பதுடன் ஒப்பிடுகையில் இது 25·2 சதவிகிதம் குறைவாகும். மாநிலத்திலுள்ள பயிர் நிலைமை பொதுப்படையாக திருப்திகரமாகமாக உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மகசூல் சுமாராக இருக்கும் என்றும் மற்ற மாவட்டங்களில் மகசூல் நிலைகை அவ்வளவு சுகம் இல்லை என்றும் தெரிகிறது. இந்த ஆண்டில் கிடைக்கக்கூடிய மகசூல் 19,200 டன்கள். முந்தின ஆண்டில் மகசூல் அளவு 25,600 என்பதுடன் ஒப்பிடுகையில் இது 25 சதவிகிதம் குறைவாகும்.

தொழில் வளர ஊக்கமூட்டும் யு. எஸ். சிறு தொழில்கள் காட்சி

(16-ம் பக்கம் தொடர்ச்சி)

தான். இந்த இயந்திரப் பட்டறையில் கைதேர்ந்த தொழிலாளர் ஒருவர், அநேகம் பேருக்கு வேலையளிக்க முடியும். தயாரித்த பாத்திரங்கள், பொருள்களுக்கு மெருகு கொடுப்பது, பார்சல் செய்வது, விற்பனை செய்வது முதலிய பல வேலைகளுக்கு இதில் வாய்ப்பு உண்டு.

தொழில் கூடாரத்தில், உலோகத் தகடுப் பட்டறையுடன் இயந்திரக் கருவிப் பட்டறையும் மோட்டார்கார் பட்டறையும் அமைக்கப்பட்டிருக்கும். இது தவிர இன்னும் இரண்டு சிறிய தூணில்லாத கூடாரங்களில், காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும்.

தகரப் பட்டறையில் தயாரிப்புக்களை அதிகரிக்கக் கூடிய கைக் கருவிளும், கிராமங்களில் கலப்பைகள் உலோகக் கருவிகள் முதலியவற்றைப் பழுது பார்க்க மாட்டு வண்டியில் எடுத்து செல்லக்கூடிய பற்ற வைப்பு இயந்திரங்களும் இருக்கின்றன. உள்நாட்டில் உற்பத்தி வேலைகளுக்கு உதவக் கூடியதும், இதனல் அன்னியச் செலாவணிச் செலவை குறைக்கக்கூடியதுமான அநேக இயந்திரங்களும் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும்.

உற்பத்தி சக்தியைப் பெருக்குவது, சிறந்த வேலைப்பாடு,



தச்சுப்பட்டறைப் பிரிவு; மரக்கடைசல் இயந்திரத்தில் வேலை நடக்கிறது.



பால்பண்ணைப் பிரிவு: பாலைப்பக்குவப்படுத்திக் கெடாமல் வைத்திருக்க உதவும் பாஸ்டியூரைஸர் இயந்திரம்.

நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு, மனித மாண்பை நிலை நிறுத்துவதில் முன்னேற்றம் ஆகியவற்றில் அமெரிக்கத் தொழிலாளர்களின் பயனுள்ள பணியை விளக்கும் காட்சிகளும் தொழில் கூடாரத்தில் இடம் பெற்றிருக்கும்.

வர்த்தகக் குழு

இன்னொரு கூடாரத்தில் வர்த்தகக் குழு ஒன்றில் காரியாலயம் இருந்து வரும். அமெரிக்கத் தொழில் பிரமுகர்களைக் கொண்டது இக் குழு. இந்தியாவுக்கு அக்கறையுள்ள உற்பத்தி, விற்பனை வாய்ப்பு, விற்பனை முறைகள், நிதி பிரச்னைகள் முதலியவற்றில் இவர்கள் நிபுணர்கள். ஒவ்வொரு நாளும் கூடாரத்தில் தங்கியிருந்து, கண்காட்சிக்கு வரும் தொழில் பிரமுகர்களுடன் அமெரிக்காவில் இந்தியப் பொருள்களுக்கு இருக்கும் விற்பனை வாய்ப்புகள், முதலீடு ஒத்துழைப்பு வாய்ப்புக்கள் முதலியவற்றைப்



மரத்தில் விளையாட்டுச் சாமான்கள் செய்யும் பகுதி. மரவேலை இயந்திரங்கள் பொம்மைகள் செய்ய உதவியாக இருக்கின்றன.

பற்றி விவரிக்கத் தயாராக இருப்பர்.

அறுவர் அடங்கிய இந்த யு. எஸ். வர்த்தகக் குழுவின் தலைவர் எட்வின் ஸி. ஹிக்பி. இவர் வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், மார்க்கெட் நிலவர ஆராய்ச்சியிலும் நிபுணர். ஓஹையோவில் கிளீவ்லந்தில் இருக்கும் யு. எஸ். வர்த்தக இலாகா கிளைக் காரியாலயத்தின் மானேஜர். மற்ற உறுப்பினர்கள் யு. எஸ். தனியார் தொழில் அல்லது வர்த்தகத்தில் பிரமுகர்களாக விளங்குபவர்கள். கொடுக்கல் வாங்கல், உலோக இயல், எஃகுப் பொறி இயல், சில்லறை வர்த்தகம், தொழில், பெரும் வாணிபம் முதலியவற்றைச் சேர்ந்தவர்களாகவும் ஆலோசனையாளர்களாகவும் இருக்கின்றனர்.

வர்த்தகத் தகவல் நிலையத்தில் நூல் நிலையம் உண்டு. 1000க்கு மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைளும் இந்த நிலையத்தில் இருக்கும். காட்சிக்கு வருபவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் ஒவ்வொரு நாளும் கண்காட்சியில் பல்வேறு தொழில் நுட்ப விஷயங்களைப் பற்றி சினிமாப் படங்களும் காட்டப்படும்.

மூன்றுவது கூடாரத்தில் வேளாண்மை பற்றிய காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இக் கூடாரத்தில் பண்ணைப் பொருள்கள் தயாரிப்ப

P. H. முகமது
நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) **சப்டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி** செய்கிறோம்.

தும், கோதுமை, சோயா மொச்சை பண்டங்கள் தயாரிப்பதும் காட்டப்படும். பல்பொடியை உபயோகித்து பால் பக்குவம் செய்யும் இயந்திரமும் ஐஸ்கிரீம் இயந்திரமும், பண்ணைப் பொருள் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும். புல்கார் என்ற புதிய கோதுமை உணவு தானியக் காட்சியில் இடம் பெறும். தானியக் காட்சியில் 'டோநட்' பணியாரம் தயாரிப்பு இயந்திரமும் இதர கோதுமைப் பொருள்கள் தயாரிப்பு இயந்திரங்களும் இருக்கும். சோயா மொச்சைப் பண்டங்களும் இந்தப் பிரிவில் முக்கியமாக இருக்கும்.

சூர்ய சக்தி ஆராய்ச்சித் துறையில் இந்தியாவின் படிப்படியான முன்னேற்றத்தை உணர்த்தும் வகையில், சூரிய சக்திக் கருவிகளும் இயக்கிக் காட்டப்படும். சூரிய சக்தி, வாணிபத்திலும் வீடுகளிலும் எப்படி நடைமுறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் காட்டும் கருவிகள், அதாவது சூரிய உலை, சூரிய பாட்டரிகள், ரேடியோக்கள் முதலியன இந்தப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும்.

வாளை ஒரு புறம் வீசி எறிந்த பின் என்னை எதிர்ப்பவர்களிடம் கொடுப்பதற்கு அன்பென்ற அமுதம் நிறைந்த சின்னத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அந்த நிவேதனத்தால் தான் அவர்களை என்னிடம் இழுத்துக் கொள்ள எண்ணியுள்ளேன். —**காந்தி.**

புகைப்படப் பிடிப்பு

புகைப்படப் பிடிப்பு ஒரு நுால் கலையா? இல்லாவிடில், புதுமைப் படைப்புக்கு வாய்ப்பற்ற வெறும் இயந்திர சிருஷ்டி தானா? அதற்கு நிலையான மதிப்பு எதுவும் கிடையாதா?

நெடுங்காலமாக நிபுணர்களுக்கு மயக்கம் விளைக்கும் கேள்வி இது. புகைப் படப்பிடிப்பை ஒரு செய்தி அறிவிக்கும் சாதனமாக மட்டும் கருதுவோர் உண்டு; அது அவசரத்துக்கு உடனே பயன்பட வேண்டியதாக இருப்பதால், அதில் புதுமையான படைப்புத் திறன் ஒன்றும் விளங்குவதற்கு வழி இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர். எனினும், சிறந்த புகைப் படத்தைப் நுண்கலையாகக் கருதவேண்டும் என்று உணர்வாரும் உளர். அவர்களில் ஒருவர் நியூயார்க் நகரைச் சேர்ந்த புகைப்பட நிபுணர் ஐவான் டிமிட்ரி என்பவர். "சாட்டர்டே ரிவ்யூ" என்னும் கலைவார இதழ் மூலம் அவர் தமது கருத்துக்கு ஆக்கம் தேட முற்பட்டார். அணு பொருள் களஞ்சியங்கள் சிறந்த புகைப்படங்களைச் சேகரித்துக் காட்சிக்கு வைக்குமாறு அவர் அவ்வார இதழில் எழுதினர். சிறந்த வர்ண ஓவியங்களையும், சிற்பங்களையும் அரும் பொருட் களஞ்சியங்கள் சேகரித்துக் காட்சியில் வைக்கின்றன அல்லவா; அதுபோல.

அவரது கருத்துக்குப் பேராதரவு கிடைத்தது. இருபத்தொரு அரும் பொருள் களஞ்சியங்களின் தலைவர்கள் சிறந்த புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் கலை நுட்பங்களை மக்கள் காணுமாறு செய்தல் வேண்டுமென்று கருதினர்கள். இதற்குமுன்பெல்லாம் புகைப் படக் கண்காட்சிகள் யாரேனும் ஒருவரால் ஏற்பாடு செய்யபடும்; ஒருவர் பிடித்த படங்களே அக் காட்சியில் வைக்கப்படும்.

"சாட்டர்டே ரிவ்யூ" வின் ஆதரவில் புகைப்படங்கள் திரட்டி, அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துக் கண்காட்சியில் வைக்க ஏற்பாடு செய்யும் பணியை டிமிட்ரி ஏற்றுக்கொண்டார். சிறந்த படங்களைத் தேர்ந்தெடுத்த குழுவுக்கு அவர் தம்முடைய படங்களை அனுப்பவில்லை; அந்தக் குழுவில் உறுப்பினராகவும் அவர் இருக்கவில்லை.

நியூயார்க் மெட்ராப்பாலிட்டன் அரும் பொருள் களஞ்சியத்தின் தலைவராகிய ஜேம்ஸ் ஜே. ரோரிமர் என்பவரைத் தலைவராகக் கொண்ட பதினைகு நிபுணர் உள்ள குழு சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் பணியைச்செய்தது. 438 புகைப்படங்களிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அதிலுள்ள



நீராவி உற்பத்தி செய்யும் இயந்திரம்; மின்சாரத்தைப்போலவே நீராவியும் ஒரு விசை யாகும்.

ஒவ்வொரு படமும் நிலையாக தொகுப்பில் வைக்கத் தகுந் அரும் பொருட் களஞ்சியத் தது.

Regd. 141246

WHITE HORSE SOAP

ஒயிட் ஹார்ஸ் சோப் தரத்திலும் குணத்திலும் சிறந்ததென எல்லோராலும் புகழப்பட்டது, தகுந்த விலையில் கிடைக்கக்கூடியது.

எங்கும் கிடைக்கும்:—

NATIONAL INDUSTRIES

MADRAS-21.

சிறந்த படங்களிலிருந்து மிகச்சிறந்தவற்றை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? கடினமான வேலைதான். ஆயினும் பதினான்கு நிபுணர்களும் சேர்ந்து அப்பணியைச் செய்தார்கள். 85 படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றில் 30 வர்ணப் படங்கள். அந்த 85 படங்களும் நுண்கலைக்குரிய இயல்கள் அமைந்தவை.

புகைப்படப் பிடிப்பு நுண்கலைகளில் ஒன்று எனக் கருதுவதால்தான், மெட்ராபபாலிட்டன் அரும்பொருள் களஞ்சியம் இத்திட்டத்தில் கலந்து பணியாற்றுகிறது.

பல பொருள்களைக் குறிக்கும் படங்கள் கண்காட்சியில் உள்ளன. உருவப் படங்கள், செய்திப் படங்கள், உணர்ச்சி உருவங்கள், கதைப் படங்கள் முதலியவையெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மறக்க முடியாத சில உருவப் படங்கள் அந்தத் தொகுப்பில் உள்ளன. பிரதம மந்திரி நேரு வின்ஸ்டன் சர்ச்சில் படங்கள் இரண்டு இருக்கின்றன. அவர்களே நேரில் இருப்பது போல அவை அவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளவை. இப் படங்களை எடுத்தவர் கார்ஷ்டி என்ற புகைப்படக் கலைஞர். பனிமூடிய தெருவில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மக்கள் படமும், ஒரு பையனையும் அவனது நோய் கொண்ட நாயையும் காட்டும் படமும், இயற்கை வனப்பை உள்ளவாறே காட்டும் புகைப் படங்களும் உள்ளன.

இன்றைய புகைப்படக் கலை புதுமை படைக்கும் திறன் வாய்ந்தது. அதனைக் காட்டும் படங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்கள் புதுமைப் படைப்புக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

ஒளிதான் புகைப்படக் கலைஞரின் அடிப்படை ஆயுதம். அத

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினூர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில் ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

* 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
* தி சிமிண்ட் கான்கிரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
* 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
* 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
* 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
* "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை
* 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
* 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
* 139, சூளை ஹைரோடு, சென்னை.
* 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
* 395, பிராட்வே, பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது சென்னை.

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893

போன் : 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள் : டாடா. S & L ஜி. ஐ பைப்புகள் : எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

சூரிய சக்தி ரேடியோ: மின்சாரமோ; வெளிமின்கலமோ தேவை இல்லை. வெளிச்சத்திலிருந்து ரேடியோ வேலை செய்வதற்கு வேண்டிய மின்விசை கிடைக்கிறது. சூரிய சக்தி நிபுணர் திரு. எல்லட் ரேடியோ இயங்குவதை கண்காட்சியில் விளக்குகிறார்.

An opportunity will be more convincing

FOR

Steel Structural Fabrications,
Gates, Grilles, Storage Tanks,
Ferrous & non-ferrous Castings.

CONTACT :

BUILDERS INDUSTRIES,

Mechanical & Structural Engineers
Iron & Brass Founders,

33, WALLTAX ROAD, MADRAS-3.

னைத் திறமையாய்ப் பயன்படுத்தத் தெரிந்தவர்களே புதுமை படைக்கும் கலைஞராக விளங்குவர், ஒளியைப் பல விதமாகப் பயன்படுத்தி, கலைத் தன்மை வாய்ந்த பலவிதப் படங்களைப் பிடிக்கலாம்,

தொகுப்பிலுள்ள பல படங்கள் வர்ண ஓவியங்கள் போன்றவை. ஸியனூர்டீ மெக்கோம் எடுத்த "மெக்ஸிகோ பண்ணைச் சமையலறை" ஆன்செல் ஆடம்ஸ் எடுத்த "நியூ மெக்ஸிகோ கோயில்" ஆகிய வர்ண ஓவியங்கள் போன்றவை.

பார்த்து உள்ளவாறு ஓவியமாகத் தீட்ட முடியாத காட்சிகளைப் பிடிப்பதில் புகைப்படக் கலை சிறந்து விளங்குகின்றது. காட்சிகளையும் உணர்ச்சிகளையும் புகைப்படக் கலைஞர் பிடித்துக் காட்ட முடியும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள படங்களெல்லாம் புகைப்படத்தின் கலைத் தன்மையைக் காட்டுவனவாகும், இத் தொகுப்பு இத்துறையில் இன்னும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு ஊக்கமூட்டுவதாகும்.

மனிதன் திறமை

படம் பிடிக்கும் காமராவுக்கு உள்ள குறைபாடுகளைப் புகைப்படம் பிடிப்பவன் மேற்கொண்டு, தான் பிடிக்க வேண்டிய படத்தில் தன் உணர்ச்சியையும் கலந்து, உயிருள்ளதாகத் தோன்றும் படம் பிடிக்கும் போது, புகைப்படம் ஒரு கலைப்படைப்பு ஆகின்றது. புகைப்படப் பிடிப்பும் ஒரு நுண்கலை என்பதில் ஐயமில்லை.

கண்காட்சியின் விவசாயப் பிரிவில்...

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க விவசாயக் குழு ஒன்று ஆசியாவில் பிரயாணம் செய்தது. மேற்கு ஆசியாவில் "புல்கார்" என்பதை முக்கிய உணவாகக்கொண்டுள்ள மக்களின் உடல்வளமும் உடல் நலமும் அந்தக் குழுவினரைக் கவர்ந்தன. நெடுங்காலம் அப்பகுதியில் வாழும் மக்கள் அவர்கள். மூடியில்லாத கெண்டியில் கோதுமையை அரைகுறையாக வேகவைத்து, அதைச் சூரிய வெப்பத்தில் அவித்த நெல்லைக், காயப்போடுவதுபோல் போட்டு அவர்கள் இந்த உணவைத் தயார் செய்கிறார்கள்.

அமெரிக்க விவசாயக் குழு இந்த விவரங்களை அமெரிக்க விவசாய இலாகாவுக்குத் தெரிவித்தது. தற்காலத் தொழில் முறைகளைக் கையாண்டு, நியாயமான செலவில், இந்த உணவைத் தயார் செய்தால், உலகத்திலுள்ள மக்கள் பலரது உணவுப் பிரச்னை தீரும். அதன் பொருட்டு, அமெரிக்கா ஒரு சிறு தொழிற்சாலை நிறுவி இந்த உணவை ஏராளமாக உற்பத்தி செய்வதற்கு இரண்டு ஆண்டுகள் சோதனைகள் நடத்திப் பார்த்தது.

புது உணவு புல்கார்

"புல்கார்" என்னும் உணவு உற்பத்தி செய்ய அங்கு செய்த சோதனைகளின் பயன்கள் சில வற்றை அமெரிக்க சிறுதொழில் கண்காட்சி யின்விவசாயப் பிரிவில் காணலாம்.

புல்காரை அரிசியைச் சமைப்பதுபோல் சமைக்கலாம். அரிசிக்குப் பதிலாக அதனைப் பயன்படுத்தலாம். அரிசியோடு கலந்தும் அதைச்சமைக்கலாம். குழந்தைகளுக்கும், பலவீனர்களுக்கும், மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அது நல்ல உணவு. புல்காருக்கு நல்ல மணமும்உண்டு. தீட்டிய அரிசிக்கு உள்ள சுவையும் உண்டு. கோதுமை மணியிலுள்ள வைட்டமின்களையும் உலோகச் சத்துக்களையும் அது இழப்பதில்லை.

புல்காரையும், மற்றும்கோதுமைப் பொருட்களையும் எவ்வாறு சமைப்பது என்பது கண்காட்சியில் காட்டப்படும், "டோனட்" பணியாரங்கள் சுடும் இயந்திரம் ஒன்றை அங்கு பார்க்கலாம். அது நிமிஷத்துக்கு ஒரு டஜன் பணியாரம் சுடுகிறது. கோதுமையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அந்த இயந்திரம் காட்டுகிறது.

தென் இந்தியாவில் மக்கள் உணவில் புரட்சி உண்டுபண்ணக் கூடிய மற்றொரு உணவுப் பொருள் சோயா மொச்சை,

அமெரிக்கர் கையாளும் அன்றாட உபயோகப் பொருட்களைக் காணும் கூட்டம்.

அது உலக முழுவதும் விரைவாக மக்களது உணவுப் பொருளாகப் பரவி வருகிறது.

சோயா மொச்சை

சோயா மொச்சைப் பகுதியில் அந்த மொச்சையைக் கொண்டு செய்யக்கூடிய சத்துணவு வகைகளைப் பார்க்கலாம். இயற்கையிலுள்ள புரத வளம் நிறைந்தது சோயா மொச்சை. அதைப் பலவகை உணவுப் பொருள்க

ளாகச் செய்துவிடலாம். இந்திய உணவில் புரதச் சத்து குறைவாக உள்ளதால், அந்தக் குறைபாட்டைப் போக்க ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது எனவே, எதிர்காலத்தில் சோயா மொச்சை அதிகமாகப் பயிர்செய்யப்படும். அதனால் புரதச் சத்துக் குறைபாடு நீங்கும்.

அமெரிக்காவில் புரதச் சத்துள்ள காலை உணவு தயாரிப்பதற்கும், ரொட்டி சுடுவதற்கும், குழந்தை உணவுகள் சமைப்பதற்கும் சோயா மொச்சை பயன்படுத்தப் படுகிறது. சோயா மொச்சையில் புரதச் சத்து உள்ளதால், காந்திஜி இந்திய மக்கள் சோயா மொச்சை உண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

பால் பண்டங்கள்

விவசாயப் பிரிவிலுள்ள மற்றொரு பகுதி அமெரிக்கப் பால் பண்ணைப் பொருள் உற்பத்தி முறைகளைக் காட்டும். பாலைப் பக்குவப்படுத்தல், பால் பவுடர் பால் கொழுப்பு ஆகிய வற்றிலிருந்து ஐஸ் கிரீம் செய்தல் அங்கு காட்டப்படும்.

பால் பண்ணைப் பகுதியில் எஃகினால் செய்த கறை பிடியாத பாஸ்டியூரைஸர், ஹோமோஜெனைஸர், பாலைக் குளிர வைக்கும் சாதனம், பால் டிஸ்பென்ஸர், பால் சேமிப்புப் பாண்டம், ஐஸ்கிரீம் மிக்ஸ்மேக்கர், உறைய வைக்கும் கருவி, கட்டியாக்கும் பெட்டிகள், துப்புரவுக் கருவி ஆகியவையெல்லாம் பால்பண்ணைப் பகுதியில் உள்ளன.

அமெரிக்க வர்த்தக இலாகா, அமெரிக்க விவசாய இலாகாவின் வெளிநாட்டு விவசாயப் பணித்துறை, சர்வ தேசப் பால் பண்ணைச் சங்கம் ஆகியவற்றின் கூட்டுறவு முயற்சியால் பால்பண்ணைக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வ தேசப் பால் பண்ணைச் சங்கத்தின் இந்தியா உள்ளிட்ட 49 நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

பால் பண்ணை பற்றியும், கண்காட்சியில் பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் அறிய விரும்புவோர் அங்கு உள்ள நிபுணர்களைக் கண்டு பேசலாம்.



ஸ்ரீ. முருகன் டுடோரியல்

இன்ஸ்டிடியூடின் 10 வது ஆண்டுவிழா !

15—8—59ந் தேதி, சனிக்கிழமை, ஸ்ரீ. முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூடின் 10வது ஆண்டு விழாவும், சுதந்திர தின விழாவும், ரிஷிவந்தியத்தில், கவிஞர் ஸ்ரீ. கா. மு. ஷெரீப் அவர்கள் தலைமையின் கீழ் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தேசியக் கொடியை. ஸ்ரீ. டி. ஆர். ராகவாச்சாரி ஏற்றிவைத்தார். கடவுள் வணக்கம், சினிமா நடிகர் ஸ்ரீ. எஸ். எம். குமரேசன் பாடினார்.

தேசியக்கீதம் ஸ்ரீ. எம். கே. கணபதி பாடினார்.

"தொழில்" ஆசிரியர் ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் பேசியதாவது:—

சுதந்திர தினம் எல்லோருக்கும் பொதுவான தினமாகும்; கட்சிபாகுபாடு இல்லாமல், எல்லாக்கட்சிகாரர்களும், ஒன்றுசேர்ந்து கொண்டாட வேண்டிய தினம் தான் சுதந்திர தினமாகும். நமக்கு ஒற்றுமை அவசியமாகும். ஆனல் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி, பொதுமக்களுக்கு நல்ல காரியங்கள் பல செய்துள்ளன. மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்களை மாகாண சர்க்காரும், மத்திய சர்க்காரும் வைத்துள்ளன. இந்த நல்ல திட்டங்களை நிறைவேற்ற எல்லா கட்சிகளும், தங்களுடைய கூட்டுறவை கொடுப்பது மிகவும் அவசியமாகும். டுடோரியல் இன்ஸ்டியூட் டைரக்டர் டாக்டர் ஆர். பி. கந்தசாமியை தொழில் ஆசிரியர் ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் பாராட்டிப் பேசினர்.

அமெரிக்க தமிழ் செய்தி ஆசிரியரான ஸ்ரீ. வ. உ. சி. சுப்பிரமணியன் அவர்கள் பேசியதாவது:—

சுதந்திர தினத்தை எல்லோரும் கொண்டாடவேண்டுமென்று அவர் கூறிக்கொண்டு சுதந்திரத்தை வாங்கித்தந்த தியாகிகளை பாராட்டிப் பேசினர். பேச்சாளர்கள், எழுத்தாளர்கள். சினிமா நடிகர்கள் நிறைய வந்திருக்கிருர்கள். அவர்களுடைய வரவு உண்மையிலேயே கல்வி ஸ்தாபனத்தை சிறப்படையச் செய்கிறதென்று கூறிக்கொண்டு இன்ஸ்டியூட் டைரக்டர் டாக்டர் ஆர். பி. கந்தசாமியை பாராட்டிப் பேசினர். வசன கர்த்தா, உசிலை. ஸ்ரீ. த. சோமநாதன் பேசினர். பிறகு ஸ்ரீ. ஒ. ஏ. கே. தேவர். கவிஞர் சுரதா, சினிமா நடிகர் எஸ். ஏ. நடிராஜன், கே. ஆர். செளடையா ஆகியோர்கள் பேசி

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor
(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

●

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

●

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS

ஞர்கள். ஏராளமான, பெண்களும், சினிமா நடிகர்களும் வந்திருந்தார்கள். குழந்தைகளுக்கு இனிப்புக்கள் வழங்கப்பட்டன; பகல் உணவு கொடுக்கப்பட்டது. ஏழைகளுக்கு சேலைகளும், வேஷ்டிகளும் கொடுக்கப்பட்டன. மானேஜிங் டைரக்டர் டாக்டர் ஆர். பி. கந்தசாமி நன்றி கூற விழா, முடிவடைந்தது.

❋

இந்தியாவில் தெர்மாமீட்டர்கள் தயாரிப்பு!

கல்கத்தாவிலுள்ள, இந்திய சர்க்கார் ஸ்தாபனமான "மெஸர்ஸ் நேஷனல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் லிமிடெட்". ஜப்பானிய ஸ்தாபனமென்றில் ஒத்துழைப்புடன் வைத்திய உபயோகத் தெர்மாமீட்டர்களைத் தயாரிக்க உத்தேசித்திருப்பதாக தொழில் மந்திரி, ஸ்ரீ. மதுபாய் ஷா, லோக் சபாவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அந்த ஒத்துழைப்பு சம்பந்தமாக நிபந்தனைகள் அந்தக் கம்பெனியின் பரிசீலனையிலிருக்கின்றனவென்றும், அவை பரிசீலனைக்காக சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவென்றும் அவர் தெரிவித்தார்.

Small Profits & Quick Returns

NO ORDER IS TOO
SMALL OR TOO
GREAT FOR US

★

Quality, Quantity Guaranteed Moffussil orders Promptly Executed; a trial will convince you.

Manufacturers & Merchants of Burma Teakwood barrels & Tubs.

Suppliers to Govt. of Madras, Corporation of Madras, Municipalities and Local Boards

V. DORAIKANNU & CO.

Sole Prop : M. V. VENKATESAM CHETTIAR.

35, Wall Tax Road, MADRAS-3.

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

DOOR HINGES, DOOR PEGS, WALL PEGS, GATE PEGS, AGRICULTURAL IMPLEMENTS, POTS, DRUMS, THAVAS, BONDS, ETC,, ETC., ETC.

R. AMIRDHALINGAM

(Government Approved Fabricator)

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

31, Sattanna Naicken St., Choolai Madras-7

அமெரிக்க சிறுதொழில்கள் கண்காட்சி

செப்டம்பர் 1லிருந்து 30ந்தேதி வரை

இந்தியாவிற்கு உதவிசெய்யவேண்டுமென்ற முயற்சியில், சிறுதொழில்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளோடு, தென் இந்தியாவிலே, முதல் முதலாக, அமெரிக்க சிறுதொழில்கள் கண்காட்சி சென்னையில் நடக்க இருக்கிறது. இயந்திரங்கள் எப்படி வியாபார வாய்ப்புக்கள் கொடுக்கமுடியும்; எல்லோரும் சுபிட்சமாக வாழ, இந்திய மக்களுக்கு, இயந்திரங்கள் மூலம் வேலை கொடுக்க எவ்வாறு சாத்தியப்படும் என்பவைகளை கண்காட்சி மூலம் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள சில நுட்பமான சிறுதொழில் இயந்திரங்கள்.

3000° சென்டி. கிரேட் உஷ்ணத்தை உண்டு பண்ணும் சூரிய அடுப்பு.

சூரிய ஒளியால் தண்ணீரை கொதிக்க வைக்கும் அடுப்பு.

மோட்டார் ரிபில்டிங் ஷாப்.

பிரேக் ரெலினிங் ஷாப்.

ஆட்டோ டியூனப் கிளினிக்.

தச்சப் பட்டறை.

உலோகத் தகடு பட்டறை.

உலோகப் பட்டறை

தொழில் செய்தி தகவல் நிலையத்தில்:—

தொழில் சம்பந்தமான வாசகசாலை.

தூதுக் குழு அலுவலகத்தில் வியாபார சம்பந்தமான கேள்விகளுக்கு, தூது குழு உறுப்பினர்கள் தினசரி பதில் கொடுப்பார்கள்.

உணவுக்காட்சியில்:—

சோயா மொச்சையிலிருந்து தயாரிக்கும் உணவுப்பண்டங்கள்

"டோநட்" பணியாரம் செய்யும் இயந்திரம்.

பிலிம் காட்சிகள்.

பிரவேசக் கட்டணம் கிடையாது.

வேலை நாட்களில்—4 லிருந்து இரவு 9 மணிவரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும் ரஜா நாட்களிலும் } —1 லிருந்து இரவு 9 மணிவரை

ஒரு மனிதனும் ஒரு இயந்திரமும் சேர்ந்தால் 30 பேர்களுக்கு வேலை கிடைக்கிறது.

ஜவுளித் தொழில் கழகம்!

பதினேழாவது நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியிலிருந்து நேசவாளர்களின் கூட்டம் ஒன்று பென்ஸில்வானியாவிலுள்ள பிலடெல்பியாவுக்குச் சென்றது. அமெரிக்காவில் கிழக்குப் பகுதியில் பிலடல்பியா நகர் இருக்கிறது. அங்கு துணி நெசவு செய்வதற்காக அவர்கள் சென்றனர். அது முதல் அமெரிக்காவில் ஜவுளித் தொழில் நகரங்களில் ஒன்று என்ற புகழும், பெருமையும் பெற்று விளங்கி வருகிறது பிலடல்பியா. எனவே அமெரிக்காவிலேயே முதன் முதலாக ஜவுளித் தொழில் பள்ளி அங்கு நிறுவப்பட்டது முற்றிலும் பொருத்தமானது. அது வளர்ந்தோங்கி பிலடல்பியா ஜவுளிக் கழகம் என்று பெயரில் இன்று விளங்கி வருகிறது.

ஜவுளித் தொழிலில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு அமெரிக்கா பெரும் அளவுக்கு ஐரோப்பாவையே நம்பியிருக்க வேண்டியிருந்ததை உணர்ந்த உள்ளூர் ஜவுளித் தயாரிப்பாளர்கள் சிலரால் 1883-ல் பிலடல்பியா ஜவுளிப் பள்ளி நிறுவப் பெற்றது- அது முதல் ஆணும், பெண்ணுமாக 3,000 பேர்களுக்கு மேல் அங்கு பயிற்சி பெற்றுள்ளனர்-

வெளிநாடுகளிலிருந்து தொலை தூரம் நடந்து வந்து பல மாணவர்கள் பிலடல்பியாவில் பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் தொகை அதிகரித்துக்கொண்டே வந்துளளது. உண்மையில் இது குறித்துக் கழகம் பெருமை கொள்கிறது- 18 நாடுகளைச் சேர்ந்த பல மாணவர்கள் தற்போது இங்கு பயிற்சி பெறுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களில் பாதிப்பேர் கானடா, கொலம்பியா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளிலிருந்தும் -டும் வந்துள்ளவர்கள். உலகில் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரையுள்ள சினி, பொலிவியா, பிரேஜில், சீனு, டென்மார்க், இக்வடார், எகிப்து, இங்கிலாந்து, பிரான்ஸ், லெபனுன், மெக்ஸிகோ, ஸ்விட்ஜர்லாந்து. வெனிஜுலா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய பல வேறு நாடுகளிலிருந்து மாணவர் வந்து வந்து பயிற்சி பெறுகின்றனர்.

ஜவுளித் தொழிலின் பிரபலஸ்தர்களே நடத்தி வருவதால் தான் பிலடல்பியா ஜவுளிக் கழகம் பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ளது. கழகத்தின் டிரஸ்டிகளாகவும், நிர்வாகிகளாகவும் அவர்கள் பணி புரிகின்றனர், அவர்களது நெருங்கிய ஒத்துழைப்புடன் கழகத்



சென்னை வந்துள்ள அமெரிக்க வர்த்தகத் தூது குழுவினர்களுக்கு நகரிலுள்ள வர்த்தக சபை கன்னிமாரா ஓட்டலில் தேநீர் விருந்தளித்து கௌரவித்தது.

தின் பயிற்சித் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது: அவர்களது தலைமையில் கல்வித் திட்டம் மட்டுமின்றி, கழகத்தின் கட்டிட வசதிகள் முதலியனவும் வளர்ந்தோங்கியுள்ளன. ஜெர்மன் டவுனில் 12½ ஏக்கர் நிலப் பரப்பில் கழகம் அழகாகக் காட்சியளிக்கிறது. பிலடெல்பியா நகரை ஒட்டி ஜெர்மன் டவுன் இருக்கிறது. ஜவுளித் தொழில் அதிபர்களின் பெருந்தன்மைக்கும், தீர்க்க தரிசனத்தக்கும் ஒரு எடுத்துக் காட்டாக கழகம் இயங்குகிறது. வெளிநாட்டு மாணவர்களை கழகத்தின் இயற்கை வனப்பு நிறைந்த சூழ்நிலை பெரிதும் கவர்ந்துள்ளது.

கைத்தறிகளுடன் தொடங்கி....

ஆரம்பத்தில் பள்ளியில் இருந்த தளவாடங்கள் எல்லாம் இரு கைத்தறிகள் தாம். பின்பு இரு விசைத் தறிகள் சேர்க்கப் பட்டன. படிப்படியாக வளர்ந்து வந்து இன்று நேசவுப் பட்டறையில் 100 விசைத் தறிகள் இருக்கின்றன. பஞ்சு, கம்பளம், முதலிய பலரக நூல்கள் தயாரிப்புக்கான யந்திரங்கள் வேறு இருக்கின்றன. 1887-ல் சாயம் போடுதல் அச்சடித்தல், முதலியன கொண்ட ஒரு ரசாயனப் பிரிவு நிறுவப்பட்டது.

தரம், தகுதி, லாகவம் பொருந்திய நவீன யந்திரங்கள் இன்று கழகத்தின் ஆராய்ச்சிக் கூடத்தில் இருக்கின்றன. நூல் நூற்பு, நெசவு, சாயமிடுதல் முதலிய பலவேறு துறைகளிலும் பயன்படுத்தப்படும் யந்திரங்களில் மாணவர்கள் பயிற்சி பெற வாய்ப்பு உண்டு. செய்முறை யந்திரங்கள் தவிர, நார், நூல், துணி, சாயச் சாமான்கள், எண்ணெகள் முதலியவற்றை விஞ்ஞான முறைகளில் சோதிப்பதற்கு அவசியமான பல்வேறு கருவிகளிலும் கழகத்தின் பல பிரிவுகளில் இருக்கின்றன. வழக்கமாக ஜவுளித் தொழிலில் நடத்தப்படும் எந்த விதமான சோதனைகளையும் இங்கு நடத்த முடியும்.

கை நெசவு முதல் படிப்படியாக ஜவுளித் தொழிலின் பல வேறு துறைகளிலும் கழகம் பயிற்சி அளிக்கிறது. பொறியியல் மட்டுமின்றி விற்பனை வாய்ப்பு, விலை நிர்ணயம் ஜவுளிப் பொருளாதாரம் முதலிய பலவேறு பிரிவுகளிலும் 4 ஆண்டுக் காலத்தில் மாணவர்கள், பயிற்சி பெறுகின்றனர். ஜவுளித் தொழில் பொறியியல் அல்லது ரசாயனம் சாயமிடலில் 'பி. எஸ்ஸி' பட்டம் வழங்கப்படுகிறது.

1950-51ம் ஆண்டுகளில் ஜப்பான், இந்தியா, இங்கிலாந்து. ஜெர்மனி முதலிய பல வேறு நாடுகளிலிருந்து பிரமுகர்கள் பிலடெல்பியா ஜவுளிக் கழகத்துக்கு விஜயம் செய்துள்ளனர். வெளி நாடுகளிலிருந்து ஏராளமான மாணவர்கள் இங்கு வந்து பயில்வதால் அவர்களது நலனுக்காக 1949-ல் இங்கு ஒரு சர்வதேசக் கிளப் நிறுவப்பட்டது. நவ ஜீவன் கஜ்ஜார் என்ற இந்திய மாணவர் தான் அதன் முதல்

தொழில் கூட்டுறவு சங்கங்கள்

தொழில்துறைக் கூட்டுறவு சங்கங்கள் தான் பொருளாதார க்ஷேம நலத்திட்டங்களில் மாமூலாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிற ஸ்தாபன ஏற்பாடாகும். அதன்படி, வேலை இல்லாமலிருக்கிற மாதர்கள் சொற்பத் தொகையை அனுமதிக் கட்டணமாகச் செலுத்தி, சில பங்குகளையும் விலைக்கு வாங்கி அந்த சங்கங்களில் அங்கத்தினர்களாகவேண்டும். அந்தக் கூட்டுறவு சங்கம் நிறுவனத்திலிருக்கிற தொழிற்சாலைகளில் துவங்கப்படவிருக்கிற வேலைகளில்லுள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு அந்தத் தொழிற் சாலைகளிலேயே வேலை கிடைக்கும்.

கைத்தறி போர்டின் உதவியுடன் இந்தியாவின் பல பகுதிகளிலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் அதற்குப் பிறகும், 50 கை நெசவுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும். அவை பயிற்சி நிலையங்களாக வேலை செய்யும்; அவைகளில் ஒவ்வொன்றிலும் 60 மாதர்களுக்கு பாவு போடுதல், நெய்தல், சாயமிடுதல், இதர துணை வேலைகள் ஆகியவைகளில் ஒரு

தலைவர். அவர் அலஹாபாத் நகரைச்சேர்ந்தவர். ஆண்டுக்கொரு முறை இந்தக் கிளப் தன் உறுப்பினர்கள் மட்டுமே தயாரித்த ஜவுளி ரகங்கள் கொண்ட கண்காட்சி ஒன்றை நடத்துகிறது.

நூல் நிலையம்

ஜவுளித் தொழில் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப விஷயங்கள் அடங்கிய நூல்கள் கொண்ட ஒரு சிறந்த நூல் நிலையம் ஒன்றும் கழகத்தில் இருக்கிறது. நூல், சோதனை முறைகள், அச்சிடல், சலவை, சாயமிடல், மெருகிடல், ரசாயனம், பௌதிகம், ஆலை நிர்வாகம், கனிதம் உள்பட பல இயல்களைப் பற்றியும்; பிரிட்டிஷ், அமெரிக்க இலக்கியங்கள் பற்றியும் சுமார் 8,500 புத்தகங்கள் நூல் நிலையத்தில் இருக்கின்றன. இவை தவிர, ஜவுளித் தொழில் சம்பந்தப்பட்ட வெளியீடுகள் யாவும் இங்குண்டு. பத்திரிகைகள், செய்தித்தாள்கள் முதலியனவும் வருகின்றன.

கழகத்தில் பயின்ற மாணவர்கள் ஜவுளித் தொழிலில் பெரும் வெற்றி கண்டுள்ளனர் என்ற நற்பெயர் உண்டு. பிலடல்பியா ஜவுளிக் கழகத்தில் பயின்ற மாணவர்கள் உலகம் முழுவதிலும் ஜவுளித் தொழிலில் முக்கிய பதவிகளில் புகழுடன் விளங்கி வருகின்றனர்.

வருஷ காலத்துக்குப் பயிற்சி யளிக்கப்படும்; அதற்குப் பிறகு அந்த நிலையங்கள் உற்பத்தி நிலையங்களாக இயங்கும். உள் நாட்டுத் தொழில் அபிவிருத்திக்காக, திருந்திய டிசைன், துணி அழுத்தம் ஆகியவற்றிலும் மாதர்களுக்குப் பயிற்சி யளிக்கப்படும். இந்த ரீதியில் சென்னை, நாகா மலைகள், மணிப்பூர், அஸ்ஸாம், ராஜஸ்தான், டில்லி, ஹைதராபாத் ஆகிய இடங்களில் கைத்தறி நிலையங்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதோடுகூட, கைவேலைப் பொருள்கள் போர்டிங் உதவியுடன் அனேகமாய் இதேபோன்ற சுமார் 40 உற்பத்தி நிலையங்களை அமைக்கவும் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

நிர்ணய ரீதியிலும் அளவிலுமான இந்த உற்பத்தி நிலையங்களையும் தவிர, சிறு உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான சில திட்டங்களும் தயாரிக்கப் பட்டு வருகின்றன. அத்தகைய யூனிட்டுகள் ஒவ்வொன்றுக்கும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீதியுள்ள காலத்தில் 40,000 ரூபாய் மானியம் கிடைக்கும். அந்த நிலையங்களை அமைக்கும் விஷயத்தில் சிறு தொழில்கள் ஸ்தாபனத்திடமிருந்து தொழில் நுட்ப உதவியும் கிடைக்கும்.

உற்பத்தி நிலையங்கள், பல்வேறு ராஜ்யங்களிலுமுள்ள மீட்பு பிற்காலப் பராமரிப்பு நிலையங்களுடன் இணைந்திருக்க வேண்டும் என்பது உத்தேசம். மீட்பு பிற்காலப் பராமரிப்பு நிலையங்களை உள்விவகார மந்திராலயத்துடன் சேர்ந்து இந்த போர்ட் நடத்தி வருகிறது. அத்தகைய 19 நிலையங்களை அமைப்பதை வர்த்தக தொழிலியல் மந்திராலயம் அங்கீகரித்திருக்கிறது; அவை கூடிய சீக்கிரம் ஏற்படுத்தப் படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

—●—

தொழில் பயிற்சி நிலையங்கள்

இவைகளில் எலெக்ட்ரீஷியன், லைன்மென், வயர்மென், பிட்டர், ஷீட்மெட்டல் காஸ்டிங், தச்சுவேலை, வெல்டிங் ஆகிய தொழில்கள் போதிக்கப்படும்.

குறிப்பிட்ட அளவு பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். மதுரையிலும், கோவையிலும் தொழில் பயிற்சி நிலையங்கள் 1959 நவம்பரில் ஏற்படும். சென்னையில் இந்தத் தொழில் பயிற்சி நிலையம் 1960 ஆகஸ்டில் தொடங்கப்படும். படித்துவிட்டு வேலையற்று இருப்போருக்காக தொழிற் பயிற்சி நிலையங்கள் பல நம மாகாணத்தில் சீக்கிரமே தொடங்கப்படும்

இந்திய அரசாங்கம் இத்திட்டங்களை அங்கீகரித்து நடைமுதல் செலவை 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொளளவும் முதலீட்டுச் செலவில் 60 சதவிகிதத்தை ஏற்றுக் கொள்ளவும் இசைந்துள்ளது.

சென்னை மாநிலத்தில் தொழில்துறை வளர்ச்சி

C. S. RAMU B. Sc. (MET)

(Joint Director of Industries and Commerce. Govt. of Madras)

மக்கள் சமுதாயம் இன்பத்துடன் வாழ இன்றியமையாத தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். இதற்கு நாட்டின் பயிர்த் தொழில் சிறந்த முறையில் அமைவது மிகவும் அவசியம். ஆனால் இந்திய நாட்டின் இயற்கை வளத்தையும் மக்கள் தொகையையும் மனதில் வைத்துக்கொண்டு திட்டம் இட முற்பட்டால், வெறும் பயிர்த்தொழில் மட்டும் முன்னேறுவதால் வாழ்க்கைக்கு ஏற்ற உயர்வு காண இயலாது. வேளாண்மையிலே இப்பொழுது இருந்து வரும் நெருக்கடியைக் குறைந்தால் தான உணவு உற்பத்தி பெருக இயலும். ஆகவே நிலத்தில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாயை மட்டும் வைத்து மக்கள் சமுதாயம் தன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வது கடினம். நாட்டின் தொழில்கள் முன்னேற நாட்டின் செல்வம் மிகுதிபடைத்து, எல்லோர் வாழ்க்கையின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இன்பம் செழிக்க வாய்ப்பு உண்டாகும்.

தொழில்கள் வளரவேண்டுமென்பதில் சிறிதளவும் ஐயமில்லையென்றாலும் எவ்வகைத் தொழில்களுக்கு சிறப்பிடம் அளிக்கப்படவேண்டுமென்பதில்தான் பலப்பல அபிப்ராய வித்யாசங்கள் நிலவி வருகின்றன. சிலர் மேல்நாடுகளை சுட்டிக்காட்டி பெரும் தொழில்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படவேண்டுமென்று வற்புறுத்திவருகின்றனர். இன்னும் சிலர், நம் நாட்டின் பொருளாதார நிலைமையை விளக்கிச் சொல்லி, பற்பல முறையிலே தொழில் முன்னேற்றம் திட்டமிடப்படவேண்டுமென்று கூறுகின்றனர். மற்றும் சிலர் முக்கிய தொழில்கள் போன்ற, இரும்பு, எஃகு, இயந்திர உற்பத்தி, போன்றவைகளையெல்லாம் கனரகத்தொழில்களாக இயங்கவேண்டுமென்றும், அன்றாட வாழ்க்கைக்கு தேவையான (consumer goods) பொருள்கள் சிறுசிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படவேண்டுமென்றும் வலியுறுத்தி வருகின்றனர். இப்படி நானகு பிரிவுகளாக தொழில்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அவை (அ) கனரகத்தொழில்கள், (ஆ) சிறு தொழில்கள் (இ) கலைத் தொழில்கள். (ஈ) கிராமக் கைத்தொழில்கள். இனி இந்

நான்கு பிரிவுகளிலும் சென்னை மாநிலம் எவ்வாறு இடம் பெற்றுவருகிறதென்பதை சிறிது ஆராய்வோம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி

பெரும் தொழில்கள் ஏற்படுவதற்கு இரும்பு நிலக்கரி போன்றவை இன்றியமையாதன. இவ்வகையிலே நம் சென்னை மாநிலம் இயற்கை அருள் குன்றிய நிலைமையில் தான் இருக்கிறது. அதிருஷ்டவசமாக தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பழுப்பு நிலக்கரி (Lignite) தொழில்துறையில் கணிசமான முன்னேற்றம்காண பெரும் வாய்ப்புக்களை அளிக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு, சேலம் நீலகிரி மாவட்டங்களிலுள்ள இரும்பு கனிப்பொருளகளை உருக்கி இரும்பு காய்ச்ச முடியும். மேட்டூரில் திட்டமிடப்பட்டிருக்கிற அலுமினிய தொழிற்சாலைக்கும் இது பெரிதும்பயன் படும். நெய்வேலியிலே மேலும் சில தொழில்கள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஆண்டிற்கு 35 லக்ஷம் டன் பழுப்பு நிலக்கரி அங்கு எடுக்கப்படும். 1963ம் ஆண்டிலிருந்து 2½ லக்ஷம்கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தியாகும். இதில் 1½ லக்ஷம் கிலோவாட் மாகாணத்துக்கு கிடைக்கும். இன்னும் 70 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட யூரியா என்ற உரம் தயார் செய்யப்படும். அடுத்தபடியாக சேலத்தில் சேர்வராயன் மலையில் கிடைக்கக் கூடிய பாக்சைட் - (Bauxite) என்ற கனிப் பொருளை உபயோகித்து ஓர் அலுமினிய தொழிற்சாலை நிறுவ திட்டமிடப்பட்டிருக்கிறது. நீலகிரி மலையில் தேசீய தொழில் முன்னேற்ற கார்பொரேஷன் (The National Industries Development Corporation) கச்சா பிலிம் உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த ஆலோசனை செய்து வருகிறது. இதற்கு வேண்டிய முன்னணி வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்தேறி வருகின்றன. கூடிய விரைவில் இது சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கப் படும்.

நெல்லை காஸ்டிக் சோடா தொழிற்சாலை

நெல்லை மாவட்டத்தில் காஸ்டிக் சோடா தயார் செய்வதற்கும், மூங்கிலை முக்கிய பொருளாகக் கொண்டு செயற்கை பட்டு உற்பத்தித்தொழற்சாலைக்கு வேண்டியகச்சா பொருள் (Rayan Pulp Factory) உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்னையின் அருகாமையிலுள்ள அம்பத்தூரில் ரப்பர் டயர் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் தனியார் துறையில் மோட்டார்கள் பம்ப் செட்டுகள், மின்சாரத்திற்கு அவசியமான ட்ரான்ஸ்ஃபார்மர்கள், (Transformers) சுவிச்சுகியர்கள் முதலியவைகள் உற்பத்தி செய்வதற்கும் சர்க்கார் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரை தொழிற்சாலை

கூட்டுறவுத் துறையிலே கோயமுத்தூர் ஜில்லாவிலும்,

வட ஆற்காடு ஜில்லாவிலும், செங்கல்பட்டு ஜில்லாவிலும் மூன்று சர்க்கரை ஆலைகள் துவக்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னை மாநிலத்திலே நடந்து வரும் பெரும் தொழில்களையும், திட்டமிடப்பட்டிருக்கிற மற்ற தொழில்களையும் இதுவரை எடுத்துக் கூறினோம். இனி சிறு தொழில்கள் அபிவிருத்தியில் என்ன, என்ன, திட்டங்கள இங்கு உள்ளன என்பதை நோக்குவோம்.

சிறு தொழிலும் நாமும்

சிறு தொழில் என்பது ஓரளவு நமக்குப் புதியதுதான். ஆகவே இத்தொழில்களைப் பற்றி அனுபவம் பெற்ற சிலரைக்கொண்டே பயிற்சி கொடுப்பது என்பது இதிலமைந்த முக்கியமான ஒரு திட்டம். மற்றும் சிறு தொழில்கள் ஏற்படுத்தி, அவைகளை நன்கு அறிந்த சில நிபுணர்களைக் கொண்டு, இத்தொழில்களை ஆரம்பிக்க ஆசைப்படுவோருக்கு ஆலோசனைகள் கூறுவதும், பலப்பல நவீன கருவிகளையும் இயந்திரங்களையும் கடன் உதவி செய்து வாங்கிக் கொடுப்பதும், இத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை தொழிலதிபர்களுக்கு எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்வதும், குறைந்த கட்டணத்திற்கு மின்சாரம் வழங்குவதும், தொழிற்கூடங்கள் அமைத்து, சிறு தொழில்கள் வளர, சிறுசிறு தொழிற்சாலைகளைக் கட்டிக்கொடுப்பதும், குறைந்த வட்டிக்கு தொழிலதிபர்களுக்குக்கடன்கொடுப்பதும் முக்கியமான சில இயந்திரங்களை சர்க்காரே வாங்கி ஒரு தொழிற்சாலை அமைத்து அந்த இயந்திரங்களை பயன்படுத்த வசதி செய்து தருவதும், உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்ய உதவி செய்வதும், இத்தொழில் அபிவிருத்திக்கு சர்க்கார் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் சில. தனியார் துறையிலே இச்சிறு தொழில்களில் அக்கரை கொண்டவர்களுக்கு வேண்டிய பொருள் உதவி செய்வதற்காக சென்னை மாநில தொழில் உதவி சட்டத்தில் (The Madras State Aid to Industries Act) ஏற்கனவே உள்ள விதிகளை மாற்றி இப்பொழுது எளிதில் பணம் கிடைக்க உதவி செய்து வரப்படுகின்றது.

தனிப்பட்டோரும் சிறுதொழிலும்

தனிப்பட்டோர் சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமானால், பலப்பல விதிகளைத் தெரிந்து, தொழிற்சாலை அமைப்பதற்கு தகுந்த ஓர் இடத்தைத் தேடி, கட்டிடம் அமைக்க சர்க்கார் அனுமதி பெற்று, நகராண்மைக்கழகத்தாரிடமிருந்துலைசன்ஸ் பெற்று பாக்டரிஸ் டிபார்ட்மெண்டின் அனுமதியும் பெற்று, சர்க்கார் அமைத்துள்ள விதி வரம்புக்கு உட்பட்டு, தொழிற்சாலை அமைப்பதென்பது அவ்வளவு சுலபமான ஒரு காரியமல்ல. இதிலுள்ள குறைபாடுகளை நன்கு அறிந்துதான் சர்க்காரே சிறு தொழில்கள் வளரக்கூடிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு ஒரு சேர பல தொழிற்

சாலைகள் அமைப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தி, முக்கியமான நகரங்களிலெல்லாம் தொழிற்கூடங்கள் அமைக்கின்றனர். தொழிற் கூடங்களிலே சிறு தொழில்கள் வளருவதற்கான வசதிகளெல்லாம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மாதிரி தொழிற் கூடங்களில் ஒன்று, சென்னைக்கு அருகாமையிலுள்ள கிண்டியில் நிறுவப்பட்டிருக்கிறது. அங்கே சுமார் 70 லக்ஷம் ரூபாய் செலவிலே பெரியதோர் தொழிற்பண்ணை கட்டப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் இத்துறையில் தனிப்பட்டோர் உற்சாகம் மிகுதியாக இருக்கும் என்பதை எதிர்பார்க்காமல் சிறிய அளவில் தொடங்கப்பட்டது. 52 தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கட்டிடங்கள் மட்டும் தான் 1957ம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவக்கப்பட்டு அவ்வாண்டு அக்டோபரில் கட்டி முடிக்கப்பட்டது. 1958ம் ஆண்டு ஜனவரி மாதம் நம் பிரதம மந்திரி ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள இந்தத்தொழிற் பண்ணையை துவக்கி வைத்தார்கள். கிண்டியிலே ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட போட்டியை முன்னிட்டு மேலும் 26 தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. மேலும், மேலும் தொழிற்சாலைகள் வேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்தவாறே இருக்கின்றன. ஆகையால் சுமார் 97 தொழிற்சாலைகள் கட்டுவதென்று இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்தொழில் பண்ணையில், ஏற்கனவே 73 தொழிற்சாலைகளில் வேலை துவக்கப்பட்டு சுமார் 1000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். ஆண்டிற்கு 60 லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் இப்பொழுது உற்பத்தியாகி வருகின்றது. இது, விரைவில் 150 லக்ஷமாக உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதைத் தவிர சுமார் 5 கோடி ரூபாய் செலவிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் பல சிறு தொழில்களுக்கான திட்டங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை: சிறந்த மரச்சாமான்கள தயாரிக்கும் நிலையம், சைகில்களுக்கு வேண்டிய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிலயம், பூட்டு உற்பத்தி சாலை, மருத்துவ கருவிகள் தயார் செய்வது விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களுக்கு தேவைப்படு பவைகளை தயார் செய்வது, விளையாட்டு சாமான்கள் தயார் செய்வது. போல்ட்டுகள் Bolts, நட்டுகள் Nuts, செய்வது, கண்ணாடி பீங்கான் சாமான்கள் விவசாயக் கருவிகள், பஞ்சாலைக்குத் தேவைப்பட்ட சாமான்கள், தோல் சாமான்கள், காலணிகள் (Footwear) முதலியன உற்பத்தி செய்யும் நிலயங்கள்.

தமிழ்நாடும் கலையும்

அடுத்தபடியாக தமிழ்நாட்டுக்கே சிறப்பளித்து, வளர்ந்து வாழ்கின்ற கலைத்தொழில்கள். தமிழகம் கலை வளர்த்து முன்னணியில் இருக்கிறது. அழகு நிறைந்த விக்ரகங்கள், கற்சிலைகள், காகித பொம்மைகள், மண் பொம்மைகள் தோலிலே

தயாரிக்கப்பட்ட கண்கவரும் பொருள்கள், சித்திர வேலைப்பாடு நிரம்பிய விரிப்புக்கள், முதலியன இங்கு வளர்ந்து வரும் கலைத் தொழில்களில் சில. சென்னையிலுள்ள மௌண்ட் ரோடில் இக்கலைப் பொருள்கள் விற்பனைக்கு, என்று ஒரு நிலையம் நடத்தப் பட்டு வருகிறது. இன்னும் மற்ற மாவட்டங்களிலே விற்பனை நிலையங்கள் ஏற்படுத்துவதற்கான திட்டங்களும் உள்ளன.

பயிர்த்தொழிலிலே ஈடுபட்டுள்ள லக்ஷக்கணக்கான மக்கள், ஆண்டின் பெரும்பகுதி வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். அவர்களுக்கு கிராமங்களிலேயே கிடைக்கக் கூடிய மூலப்பொருள்களை வைத்து அடிப்படைத்தேவைக்கு வேண்டிய பலவற்றை உற்பத்தி செய்வதற்காக, பலப்பல கிராமக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக செக்கு எண்ணெய், கை குத்தல் அரிசி, தேன், மண்பாண்டத்தொழில், தோல் பதனிடும் தொழில், உணவுக்கு ஆகாத எண்ணெய்களைக் கொண்டு தயார்செய்யும் சோப்பு, பனை வெல்லம், காகிதம், கரும்பு சர்க்கரை உற்பத்தி, முதலியன. பட்டு உற்பத்தி நெல்லையைச் சேர்ந்த தென்காசியிலும், வடஆர்க்காட்டைச் சேர்ந்த குடியாத்தத்திலும், சேலத்தைச் சேர்ந்த ஹாஸூரிலும் நடைபெற்று வருகிறது. தொழிற் துறையிலே மக்களின் பங்கு அதிகமாக இருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், கூட்டுறவு தொழிற்சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. சுமார் 2 ஆயிரம் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.

மக்கள் பங்கு என்ன ?

தொழிற்துறையிலேசென்னை மாநிலம் இயன்ற அளவு முன்னேறி வருகிறது. இன்னும் இத்துறையிலே செய்யவேண்டிய காரியங்கள் அதிகமாகவுள்ளன. மக்கள் ஆதரவைப் பெற்றுத்தான் இவ்வேலைகள் நடந்தேறவேண்டும். இதில் மக்கள் பெரும் பங்கு கொள்ள வேண்டுமென்றால் தொழில் கூட்டுறவு சங்கங்கள் நல்ல வளர்ச்சி பெறவேண்டும். கூட்டுறவு வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளெல்லாம் ஏராளமாக கிடைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. (தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களை நடத்த அனுபவமில்லாதவர்களாக இருப்பதால் சர்க்கார் செலவிலேயே பயிற்சி பெற்ற இன்ஸ்பெக்டர்கள், தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு செயலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். (கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மட்டுமின்றி சாதாரண மக்களும் சிறுதொழில்கள், கலைத் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் சாமான்களை வாங்குவதென்று உறுதி எடுத்துக்கொண்டால் தான் இத்தொழில்கள் இன்னும் முன்னேற வாய்ப்புண்டு. இந்த வகையிலே தமிழர் சிறிதும் பின் வாங்கமாட்டார்களென்றும் நம்பலாம்.

[சென்னை வானொலி நிலயத்தில் ஒலிபரப்பப்பட்டது]

கூடை போன்ற வடிவில் காட்சி யளிக்கும் இந்த அழகான படகுகள் சென்னை கடற்கரையிலுள்ள மீனவர்களால் உபயோகிக்கப்படுசிற மீன் பிடி படகுகளாகும்.

ஆலைத் தொழில் நாடான அமெரிக்கா நடத்தும் கைத்தொழில் விழா

[ஓவியர் அ. சீனு]



●

அமெரிக்கா என்றதுமே நமக்கு வானளாவ எழுந்து நிற்கும் எம்பாடர் ஸ்டேட்ஸ் கட்டிடமும், பல ஏக்கர் பரப்பிலே விரிந்து பரந்து கிடக்கும் போர்ட் தொழிற்சாலையும் தான் மனக்கண்களின் முன்னே ஓடி வந்து நிற்கின்றன.

ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தொழில் மயமாகிக் கொண்டு வரும் இந்தியாவில் மட்டுமல்லாது ஆலைகள் ஆயிரமாயிரம் படைத்த அந்தக்குபேர புரியிலும் கூட சிறுதொழில்களான கைத்தொழில்கள் இன்னும் அற்றுப்போய்விடவில்லை; பத்தாயிரம் பேர்கள் பணியாற்றும் ஆலைகளுக்கு அருகிலேயே தனி மனிதன் நடத்தும் குடிசைத் தொழில்களும் அங்கு வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஆலைத்தொழிலில் நாம் மனிதனுடைய கற்பனைகளைக் காண இயலாது. ஆலைகள் அரை நொடியில் ஆயிரமாயிரம் பொருள்களை உற்பத்தி செய்யலாம். ஆனால் அவை யாவும் ஒரே ஒரு அமைப்பு (Pattern) கொண்டதாகத் தான் இருக்கும். ஆனால் சிறு தொழில்களான கைத்தொழில்களிலோ ஒரே சமயத்தில் புனையப்புட்ட இரண்டு மண்பாண்டங்கள் கூட ஒன்றிற்கு ஒன்று வேறுபட்டும் புனைந்தவருடைய கற்பனை மெருகேற்றப்பட்டும் தான் காட்சி தரும்.

ஏன் எனில் மின் விசையால் இயங்கும் விஞ்ஞானக் கருவிகளுக்கு பகுத்தறிவு கிடையாது. அவை எல்லாம் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல ஒரே பொருளைத்தான் செய்து குவிக்குமே தவிர கைத் தொழில்களைப் போல ஒன்றிற்கு ஒன்று புதுமைகளை அவற்றால் உருவாக்க இயலாது;

எனவேதான் விஞ்ஞானம் வளர்ந்து விட்ட நாடுகளிலே கூட நுண்ணியற் கலைகளான கைத்தொழில்கள் இன்னும் சாகா வரம் பெற்றுள்ளன.

நம்முடைய நாட்டு குடிசைத் தொழில்களும் அமெரிக்க நாட்டு குடிசைத் தொழில்களும் தோற்றத்தில் வேறுபட்டிருக்கலாம். செய்யும் முறைகளிலே வேற்றுமை இருக்கலாம். ஆனல் நடைமுறை வாழ்க்கைக்குப் பயன் படுவதிலே இரண்டும் ஒன்றுதான்.

அதிலும் தற்கால அமெரிக்க கைத்தொழில் கலைஞர்கள், நுண்வினைக் கலைஞர்களின் தாயகமான தமிழகமே கண்டு வியக்கும் வண்ணம் மிகத்திறமையாக இச் சிறு தொழில்களைக் கையாளுகிறார்கள்.

அமெரிக்க ஆலைத் தொழில்கள் எவ்வாறு மிகக் குறுகிய காலத்தில் இவ்வுலகை வென்றனவோ அதே போன்று திட்டமிட்டுச் செயல்படுத்தப்படும் இச்சிறு தொழில்களும் இனி கைத் தொழில் உலகை வெல்லப் போகின்றன.

வாழ்க அமெரிக்கச் சிறுதொழில்கள்
வளர்க அவர்தம் உழைப்பு

—※—

மாட்டுச் சாணத்திலிருந்து வாயு

ஒரு சமுதாய அபிவிருத்தித் தொகுதியில் விவசாயப் பட்டறை உள்ள விஸ்தரிப்புப் பயிற்சி நிலையமொன்றைச் சுற்றிலும் மாட்டுச் சாணத்திலிருந்து வாயு தயாரிப்பதற்கான ஐந்து யந்திர சாதனங்களை அமைக்குமாறு, யூனியன் சமுதாய அபிவிருத்தி-கூட்டுறவு மந்திராலயம் ராஜ்ய சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

ராஜ்ய சர்க்கார்கள் ஐந்துக்கு மேற்பட்ட சாண வாயு தயாரிப்பு யந்திரங்களை அமைத்துக் கொள்ளலாமாயினும், இந்திய விஷயத்துக்கு ஆகும் செலவு தொகுதி பட்ஜெட்டில் 2,500 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்னும் ராஜ்ய சர்க்கார்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பரீட்சார்த்த முறையில் அமைக்கப்படுகிற இந்த யந்திரங்கள், விவசாயிகளிடையே அவைகளின் உபயோகத்தை நிதரிசனமாக இயக்கிக் காட்ட உதவும்.

பட்டு நூல் தொழில்

கோவை மாவட்டத்தில் தாளவாடி பிர்க்காவில் உற்பத்தியாகும் பட்டுப் புழுக் காடுகளிலிருந்து நூல் எடுப்பதில் உள்ள சங்கடங்களைத் தீர்க்கவும், திருந்திய முறையில் பட்டு நூல் சுற்றுவதற்கு ஊக்கமளிக்கவும் அப்பகுதியில் பட்டுநூல் எடுப்பது சம்பந்தப்பட்ட 4 உற்பத்தி பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ், மேற்சொன்ன 4 நிலையங்களுள் ஒவ்வொன்றுக்கும் 3 ஆண்டுக் காலத்துக்கு புதுவகை தாளிகள் ஐந்தும் அத்துடன் சோதனைக் கருவிகளும் அரசாங்கத்தால் கடனாகக் கொடுக்கப்படும். கருவிகளின் தேய்மான மதிப்பு, அந்த நிலையங்களிலிருந்து 6 மாதத்துக்கு ஒரு முறையான 6 சம தவணைகளில் அரசாங்கத்தால் வசூலிக்கப்படும்.

ஒவ்வொரு நிலையத்திலும் 5 பேர் பயிற்சி அளிக்கப்படுவார்கள். பயிற்சிக் காலம் 6 மாதம். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 30 உபகாரச் சம்பளம் தரம்படும். இரு நபர்களுக்கு 6 மாத காலத்துக்கு பட்டுப்புழுக் கூடுகளை நீரிலிடுவது சம்பந்தப்பட்ட பயிற்சி தரப்படும். இவர்களுக்கு மாதம் ரூ. 25 உபகாரச் சம்பளம் தரப்படும். உபகாரச் சம்பளத் தொகை செலவை முதல் இரு மாதங்களுக்கு அரசாங்கம் பூராவாக ஏற்றுக் கொள்ளும். அடுத்த இரண்டு மாதங்களுக்கு அரசாங்கமும், நிலையத்தினரும் 50:50 என்ற முறையில் இந்தச் செலவைப் பகிர்ந்து கொள்ளுவார்கள். கடைசி 2 மாதங்களுக்கு நிலையங்களே செலவை ஏற்றுக் கொள்ளும்.

திட்டத்துக்கு முதலீடு வகையில் ரூ. 10,000ம், நடைமுறைச் செலவு ஆண்டுக்கு ரூ. 2,400ம் ஆகும்.

பிரிட்டிஷ் டிராக்டர்கள் ஏற்றுமதி

இவ்வாண்டு ஜனவரி மே மாதங்களில் பிரிட்டன் ஏற்றுமதி செய்த டிராக்டர்கள் மற்றும் விவசாய எந்திரக் கருவிகளின் மதிப்பு 45,500,000 பவுன்கள். சென்று ஆண்டு இதே மாதங்களில் ஏற்றுமதியான டிராக்டர்கள் முதலியவற்றின் மதிப்பு 43,000,000 பவுன்கள். உலகச் சந்தையில், பிரிட்டன், பிற நாடுகளுடன் போட்டியிட்டு தன்னுடைய பொருள்களை அதிக அளவில் விற்பனை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது என்று விவசாய எஞ்சினியர்கள் சங்கத்தின் குறிப்பு ஒன்று கூறுகிறது.

மோட்டார் உற்பத்தித் தொழில்!

மோட்டார் கார்த் தொழில், மோட்டார் கார் துணைத் தொழில்கல்கள், போக்குவரத்து வாகனத் தொழில்கள் ஆகியவைகளுக்கான அபிவிருத்திக் கௌன்சிலின் கூட்டம் புது டில்லியில் நடைபெற்றது, யூனியன் தொழிலியல் மந்திரி, ஸ்ரீ. மதுபாய் ஷா அக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். வர்த்தக தொழிலியல்

கோல விழி அம்மன் நூறுவது ஆண்டு திருவிழா !



சென்னை, ராயப்பேட்டை, மாவடி விநாயகர் கோயில் தெருவில் கோல விழி அம்மன் 100வது ஆண்டு திருவிழா வெகு சிறப்பாக, ''மண்பாண்ட உற்பத்தி யாளர்கள்'' 23-8-59ல் நடத்தினார்கள். இந்த அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தது என்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது. இப்படம் திருவிழா அன்று எடுக்கப்பட்டது.

மந்திராலயத்தின் சீனியர் தொழில்துறை ஆலோசகரும் அக்கௌன்சிலின் அக்கிராசனருமாக டாக்டர் பி. டி. குலேல்கர் அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்,

மோட்டார் கார்த் தொழிலில் உற்பத்திச் செலவு அமைப்பு பற்றி கௌன்சில் விவாதித்தது; பல்வேறு மோட்டார் வண்டிகளின் தயாரிப்புச் செலவைக் குறைப்பதற்குப் பொருத்தமான சிபாரிசுகளைச் செய்வதற்காகக் கமிட்டியொன்றை நியமிப்பதென்றும் கௌன்சில் முடிவு செய்தது. தரக்கட்டுப்பாடு, துணை இனங்களின் உற்பத்திச் செலவு, மூலப் பொருள் தேவைகள் ஆகிய விஷயங்களை ஆராய்வதற்காக இதர மூன்று கமிட்டிகளையும் கௌன்சில் அமைத்தது.

9 REASONS

OUT OF

One Thousand and One Reasons

TO

WEAR KHADI

WORK OF NOBILITY
EQUITY FOR ALL
AID TO MILLIONS
RELIEVES POVERTY
KHADI SYMBOL OF INDEPENDENCE
HALL MARK OF HONESTY
AIDS OF HUMANITY
DISOWNS DISPARITY
INFUSES PATRIOTISM

Take a Vow To-day

BUY

CERTIFIED KHADI

AVAILABLE AT

City Khadi Development Co-op. Socity Ltd.,

Sales Depots :

JAYAMANSION,
Periamet, Madras-3
160, N.S.C. BOSE, ROAD,
Madras-1

86, BROADWAY
Madras-1

இந்தியாவின் சிறுதொழிலின் வளர்ச்சி

சி. ஜெ. எம்.

பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாம், நம்முடைய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது தலையாயக்கடமையாகும். இந்தியா, ஒரு விவசாய நாடாகும். விவசாயம் ஆண்டு முழுவதும் நடைபெறுகிற ஒரு தொழிலன்று; மழையை எதிர்பார்த்துதான், நம்முடைய விவசாயம் இயங்க வேண்டியநிலை இங்கு நிலவுகிறது. இங்குள்ள விவசாயிகளின் நிலைமை எண்ணிப்பார்த்தால், கண்ணீர் சிந்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே தான் சாவுகிறான் நம்முடைய விவசாயி. விவசாயத்தை நம்பி, வாழ்க்கையை ஒட்டலாம் என்றால், அதுவும் நடவாதகாரியமாக இருக்கிறது. நம்முடைய விவசாயிகளுக்கு விவசாயத் தொழிலில் செலவிடும் நேரம் போக, மீதி ஏராளமாக விடுபட்டநேரம் இருக்கிறது. இந்த விடுபட்ட நேரம் வீணாகக் கழிக்கப்படுகிறது. இப்படி வீணாக நேரத்தைக் கழிப்பது, நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. இந்த விடுபட்ட நேரத்தில் சிறு முதலிட்டு, சிறு தொழில்கள் செய்தால் நிச்சயமாக, கணிசமான அளவு நம்முடைய பொருளாதாரம் முன்னேறும் என்பதற்கு ஐயம் இல்லை.

சிறுதொழில்களின் அவசியம்!

ஆகவே, சிறு தொழில்கள் நம் நாட்டில் வளர்ச்சி அடைய வேண்டியது மிகமிக அவசியமாகும். கிட்டத்தட்ட 3 கோடி பேர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அல்லலுறுகிறார்கள். நம் மத்தியில் சூழ்ந்திருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு அகற்ற முடியுமென்றால், அது சிறு தொழில்களால் தான் சாத்தியப்படும் என்று, பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். சிறு தொழில்கள் இல்லாவிடில் பெருந்தொழில்கள் இயங்கமுடியாது. சிறு தொழில்கள் வளர்ச்சி அடைந்தால்தான் கனரகத்தொழில்கள் முன்னேற்றமடைய முடியும். பொருளாதாரத்துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் பின் தங்கிய நாம், பெரிய அளவு மூலதனமிட்டு, பெரிய இயந்திரங்களை நிறுவி, உற்பத்தியை பெருக்குவது தற்போது சாத்தியமன்று. சிறு தொழில்களை நிறுவி, அவைகளின் மூலம், நல்ல அனுபவம் ஏற்பட்டு, அதன் மூலம், பெருந்தொழில்களை நிறுவ படிப்படியாக நாம் முயற்சி எடுத்தால் உண்மையி

லேயே நாம், நல்ல பலனடை வோம்.

புதுடில்லி, அலஹபாத்தில் !

நாடு முழுவதிலும், தொழில் பண்ணைகள் (Industrial Estate) நிறுவ, மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும், முழுபிரயத்தனம் எடுப்பதை நாம் அறிவோம். இரண்டாவது ஐந்தாண்டுதிட்டத்தின் கீழ், சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு ஒதுக்கிய, 10 கோடி ரூபாயை 15 கோடியாக ஆக்கப்பட்டது. இதைத் தவர வெளிநாட்டு உதவியும் நமக்குக்கிடைக்க நல்லவாய்ப்புகள் எற்பட்டுள்ளன. சிறுதொழில்களுக்கான இயந்திரங்களை, விநியோகிப்பதற்கும், உற்பத்தியாகும் சாமான்களை, மார்க்கட்டில் விற்பதற்கும், தேசிய சிறுதொழில்கள் கார்ப்பரேஷன் (National Small-scale-Industries Corporation) நிறுவப்பட்டது. புதுடில்லி பக்கத்திலுள்ள ஒக்லாவிலும், அலகபாத் பக்கத்திலுள்ள நயினியிலும், இரண்டு, தொழில் கூடங்கள் நிறுவப்பட்டன. ஒகலா தொழில் கூட்டத்தில் இட்டத்தட்ட 35 தொழிற்சாலைகள் அடங்கியுள்ளன. இயன்ற அளவு இயந்திரங்களை, இத்தொழில் கூடங்கள் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கின்றன. 1958ம் ஆண்டு ஜூன் முடிய சுமார் 1 கோடி ரூபாய் பெறுமான, 1268. இயந்திரங்களை, இந்த கார்ப்பரேஷன் விநியோகம் செய்துள்ளது; சாதாரண இயந்திரத்துக்கு, இயந்திரத்தின் மதிப்பில் 20 சதவீதமும் முக்கியமான இயந்திரத்திற்கு 40 சதவீதமும், பாக்கித் தொகையை, 8 அல்லது 10 தவணைகளாக வசூலிக்கப்படுகின்றன. இயந்திரத்தின் மதிப்பு ரூ. 2000 மேல் படாமல் இருந்தால், 10 சத வீதம்தான் முதலில் வசூலிக்கப்படுகின்றன. உண்மையிலே, இந்த தேசிய சிறு தொழில்கள் கார்ப்பரேஷன், சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு நல்ல சேவை செய்கிறது.

சென்னையில் !

தற்போது, இயந்திர சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகள் (Machine Tool Factries) இந்தியாவில் 16 இருக்கின்றன. சென்னை மாகாணத்தில் இரண்டு தொழிற் பண்ணைகள் இருக்கின்றன. 70·7 லட்ச ரூபாய் செலவில் கிண்டியிலும், 28·49 லட்ச ரூபாயில் செலவில் விருதுநகரிலும், இரண்டு தொழில் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. 9·11 லட்ச ரூபாய் செலவில் தொழிற் காலனி ஒன்று ஈரோட்டில் நிறுவப்பட்டுள்ளது. திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும், தொழிற்காலனிகள் நிறுவப்பட இருக்கின்றன. பஞ்சாபில் நிறுவப்பட்ட தொழிற்கூடம் நல்லவெற்றி தந்துள்ளது. அங்கு உற்பத்தியாகும் சைகிள்கள் சைக்கிள் பாகங்கள் தையல் இயந்திரம், விவசாய இயந்திரம் விஞ்ஞான இயந்திரம் ஆகியவைகளின் மதிப்பு கிட்டத்தட்ட 43 கோடி ரூபாயாகும். 2,600 சிறுதொழில்களுக்கு

P. M. Panjatchara Chetty,
P. Selvanatha Chetty & Co.,
JEWELLERS

221, D, Netaji Subhas Chandra Bose Road,

MADRAS-1.

எங்களிடம் உத்திரவாதமான பொன், வெள்ளி நகைகள் ரெடிமேடாகவும், ஆர்டர் பேரிலும் கிடைக்கும்.

நவீனமோஸ்தரில் கல்பதித்தும், எனமல் செய்தும் தரப்படும். உத்திரவாதமான நகைகளுக்கு எங்களை அணுகுங்கள்.

வேண்டிய சாமான்கள் தயார் செய்யப்படுகின்றன. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவடைவதற்குள், பம்பாயில் இட்டத்தட்ட 16 தொழில்கூடங்கள் நிறுவப்பட்டு விடும். மோட்டாரின் பாகங்கள். மோட்டார் சைக்கிளின் பாகங்கள், ஸ்கூட்டரின் பாகங்கள் போன்றவைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இப்படியாக தேசிய சிறு தொழில்கள் கார்ப்பரேஷன், நல்லமுறையில் சிறு தொழில்கள் வ்ளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருக்கிறது. சிறுதொழில் வளர்ச்சிக்கு, நிதிபற்றாக்குறை, போதிய அளவு பயிற்சி பெற்றவர்களில்லாமை போதிய அளவு இயந்திரமில்லாமை நல்லமார்க்கட் இல்லாமை போன்றவைகள் தடையாக இருக்கின்றன. சர்க்காரும், தொழிலதிபர்களும், தொழிலாளர்களும், ஒருவரோடொருவர் நெருங்கிப்பழகி, கூட்டுறவோடு, இந்த முட்டுக்கட்டையை அகற்ற பாடுபடுவார்களேயானால், நிச்சயமாக, நம்முடைய சிறுதொழில்கள் முன்னேற்றமடையும். அதன்பலனாக, நம்மை பிடித்து அலைக்கழிக்கிற வேலையில்லாத்திண்டாட்டத்தை, நம் மத்தியிலிருந்து விரட்ட வழிபிறக்கும்; நம்முடைய பொருளாதாரம் முன்னேற்றமடைய, நமக்குவேண்டியவைகள், கடின உழைப்பு, தொடர்ந்த உழைப்பு. சலிப்

பில்லா உழைப்பு, சிறுதொழில் இராமக் கைத்தொழில்கள் வளர்ச்சியை முன்னிட்டு கூட்டுறவுச்சங்கங்கள் பல ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ளன. சர்க்கார் இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு உதவித் தொகை கொடுத்து உதவுகிறது. நாம் எல்லோரும் ஒன்றுபட்டு, தொழில் துறையில் முன்னேற்றமடைய இவ்வகைய கூட்டுறவு சங்கங்கள் மிகவும் அவசியமல்லவா! நம்முடைய சிறுதொழில்கள் சீக்கிரத்தில் வளர்ச்சி அடைந்து நல்ல பலனளிக்குமென்பதற்கு ஐயம் இல்லை. கைக்குத்தல் அரிசி, மண்பாண்டத் தொழில்; எண்ணெய்த் தொழில், தோல் பதனிடுதல் சம்பந்தமான துறைகளில் கூட்டுறவு சங்கங்கள், நல்ல வளர்ச்சி பெற்றுள்ளன. கிட்டத்தட்ட 1400 வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. 1858-59ல் இச்சங்கங்கள் 24.71 லட்சம் மணங்கு வெல்லம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஒரு கணிப்பு போடப்பட்டது. 1958 நவம்பர் முடிய 15.42 லட்சம் மணங்கு வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி வட்டாரத்திலும், வட ஆற்காடு ஜில்லா குடியர்த்தம் தாலுகாவிலும் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழில் மென்மேலும் அபிவிருத்தி அடைகின்றன. கொள்ளேகாலத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. கொள்ளேகாலம் மைசூர் ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டபிறகு, சேலம் ஜில்லாவிலுள்ள ஹொஸூர், பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. கூட்டுறவு அடிப்படையில் இயங்கும் இத்தொழில்கள் நல்ல பயனளிக்கிறது. ஒற்றுமையும் கூட்டுறவும், நம்முடைய சிறு தொழில்கள் வளர்ச்சிககு அத்தியாவசியமானவை.

அச்சடிப்பு யந்திர சாதனங்கள் தயாரிப்பு

அச்சடிப்பு யந்திர சாதனங்களின் தயாரிப்புக்காக வெளியார் கூட்டுறவுடன் டிக்டாகரில் தொழில்சாலையொன்றை ஏற்படுத்தும் விஷயமாய் இந்திய தொழில் ஸ்தாபனமொன்று பேச்சுவார்த்தைகளை நடத்தி முடித்துள்ளது என்று மத்திய தொழிலியல் மந்திரி, ஸ்ரீ மனுபாய் ஷா லோக் சபாவில் ஒரு கேள்விக்கு எழுத்துமூலம் பதிலளிக்கையில் கூறினர். அது பற்றிய ஒப்பந்ததின்படி சம்பந்தப்பட்ட வெளிநாட்டு தொழில் ஸ்தாபனம் இந்தியத் தொழில் ஸ்தாபனத்துக்கு பேடெண்ட் உரிமைகளை வழங்குவதுடன், ராயல்டி கட்டணம்வாங்கிக் கொண்டு ஏழு வருஷ காலத்துக்கு இந்தியாவில் இந்த யந்திர சாதனங்கள், அதன் பாகங்கள் முதலியவற்றைத் தயாரிப்பதற்கும், பூட்டிப் பொருத்துவதற்கும், சோதித்துப் பார்ப்பதற்கும், அவற்றை விற்பனை செய்வதற்கும் தொழில்நுட்ப தகவல்களையும் சப்ளை செய்து வருமென்றும் அவர் கூறினர்.

இந்தியாவில் அலுமினியத் தொழில்

அலுமினியமாவது இலேசுத் தன்மை, அதிக உறுதி, ஆகாய வெளி அரிப்புக்குத் தாக்குப் பிடிப்பது, சிறந்த முறையில் மின்சாரத்தைக் கடத்திச் செல்வது ஆகிய தன்மைகள் ஒருங்கே அமைந்துள்ள தனிச் சிறப்பின் காரணமாக, வளர்ந்துவருகிற தொழில் துறை முன்னேற்றத்தில் வர வர அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

இந்த உலோகமாவது இப்போது 30 தொழில்களில் 2,000-க்கு மேற்பட்ட உபயோகங்களுக்குப் பயன்படுத்தப் பட்டுவருகிறது.

அலுமினியத்தின் பிரதான ஆதார வஸ்து பாக்ஸைட்டாகும்; பாக்ஸைட்டாவது பீஹார் மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, பம்பாய் ஆகிய விடங்களிலுள்ள உயர்ந்த பீடபூமிகளில் காணப்படுகிற லாட்டரைட் அருகில் பெரும்பாலும் கலந்து காணப்படுகிறது. ஜப்பல்பூர் ஜில்லாவைச் சேர்ந்த கட்னிப் பிரதேசத்தில் 'மட்டும் தான் தாழ்ந்தமட்டத்திலுள்ள லாட்டரைட்டில் பாக்ஸைட் காணப்படுகிறது.

இந்தியாவில் சுமார் 25 கோடி டன் பாக்ஸைட் கனி இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது; ஆனால் தோண்டி எடுக்கப்படுவதற்கு லாயக்காக உள்ள பாக்ஸைட் கனியின் மொத்த இருப்பு சுமார் 2·8 கோடி டன் இருக்கக்கூடுமென்று தெரியவருகிறது; அதில் மூன்றில் ஒருபங்கு பீஹாரில் இருக்கிறது.

1948-ம் வருஷத்தில் மொத்தம் 1,76,000 ருபாய் மதிப்புள்ள 22,156 டன் பாக்ஸைட் உற்பத்தி செய்யப்பட்டது; 1958-ல் அது 10,44,000ரூபாய் மதிப்புள்ள 1,14,999 டன்னாக அதிகரித்தது.

பூர்வாங்க உலோகங்களை உள்நாட்டில் தயாரிப்பதற்கான முதலாவது முயற்சி 1937-ல் மேற்கொள்ளப்பட்டது; ஆனால் பூர்வாங்க அலுமினியத்தின் வர்த்தக ரீதியான தயாரிப்பு 1943-ல்தான் ஆரம்பிக்கப்பட்டது.

அதிலிருந்து ஜெய்கேய் நகரிலுள்ள "அலுமினியம் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா", ஆல்வாயிலுள்ள "இண்டியன் அலுமினியம் கம்பெனி" ஆகிய இரண்டு ஸ்தாபனங்களும் இந்தியாவில் அலுமினியச் சாமான்கள் முழுவதையும் உற்பத்தி செய்து வருகின்றன.

தற்போதைய உற்பத்தி சக்தி வருஷத்துக்கு 7,000 டன் முதல் 7,500 டன் வரையில் இருந்துவருகிறது (ஆனால்

வருஷாந்தரத் தேவை 20,000 டன் ஆகும்); இண்டியன் அலுமினியக கம்பெனியின் ஹராகுத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்ட பிறகு உற்பத்தி சக்தி 17,000 டன் முதல் 18,000 டன்னுக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1958-ம் வருஷத்தில் இந்தியாவில் மொத்த அலுமினிய உற்பத்தி 8185 டன்னாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசியில் நமது அலுமினியத் தேவைகள் சுமார் 40,000 டன்னை எட்டிவிடும்; எனவே, மீண்டும் 15,000 டன் முதல் 20,000 டன் வரை இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இந்தியாவில் 10,000 டன் உற்பத்தி சக்தி வாய்ந்த இரண்டு தொழிற்சாலைகள் புதிதாக ஏற்படுத்தப்படவேண்டுமென்று அலுமினியம் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

கானடா, பிரிட்டன், அமெரிக்கா, நார்வே ஆகியவை இந்தியாவுக்கு அலுமினியம் சப்ளை செய்கிற பிரதான நாடுகளாக விளங்குகின்றன. 1958-ம் வருஷத்தில் மொத்தம் 603 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 19,286 டன் அலுமினியம் இறக்குமதி செய்யப்பட்டது.

—✻—

ராணுவ தளவாடத் தொழிற்சாலைகள்

ராணுவ தளவாடத் தொழிற்சாலைகள் பாதுகாப்புப் படைகளில் ஏராளமான தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியவையாக இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளெல்லாம் ஓரளவுக்கு விசேஷ ரீதியில் வைத்திருக்கின்றன; அவைகளில் சில யந்திர சாதனங்கள் புதுப்பிக்கப்பட்டும், மாற்றப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றன. இவை இவ்வாறு நவீனமயமாக்கப்பட்டும் விஸ்தரிக்கப்பட்டும் வருவதன் பலனாக, இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுவந்த அனேக இனங்களை இங்கேயே தயாரிப்பது சாத்தியமாகிவிட்டிருக்கிறது. பாதுகாப்புப் படைகளில் தேவைகளில் 95 சதவிகிதம் வரையில் நாம் தன்னிறைவு நிலைமை அடைந்துவிட்டிருக்கிறோம்.

சென்ற ஆண்டு வருஷ காலத்தில் குண்டுகள் வகையறுக்களில் 12 ரகங்களும் வெடி மருந்து வகையறுக்களில் ஏழு ரகங்களும், ஆயுதங்களில் ஆறு ரகங்களும் உள்நாட்டில் உற்பத்தியாவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அம்பர்தாத்திலுள்ள யந்திரக் கருவித் தொழிற்சாலையில் தற்போது வருஷத்துக்குச் சுமார் 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள யந்திரக் கருவிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ராணுவ தளவாடத் தொழிற்சாலைகளின் பிரதான நோக்கம் பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான ஆயுத தளவாடங்களையும் இதர ராணுவ சாதனங்களையும் உற்பத்தி செய்வதே ஆயினும், தற்போது அவைகளில் உபரிசக்தியானது சிவில் மக்களின் உப

அடுத்த இதழில் ?

இந்த இதழ், தொழில் சிறப்புமலராக வெளிவந்ததை முன்னிட்டு, அடுத்த இதழிலில் (15-9-'59) அரசியல், சிறுகதைகள், இலக்கியம், ஆகியவைகள் வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

யோகத்துக்கானசாமான்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்தியாவின் பிற தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்படாமல், இறக்குமதியான சாதனங்களை உற்பத்தி செய்யத்தான் இந்த உபரிசக்தி உபயோகிக்கப்படுகிறது.

டிரக்குகளும் டிராக்டர்களும்

பல்வேறு வகையான சிவிலியன் உபயோக இனங்களின் உற்பத்தியோடுகூட, இத்தொழிற்சாலைகளின் ஆதாரங்கள் டிராக்டர்களையும் டிரக்குகளையும் தயாரிப்பதற்கும் இப்போது பயன்படுத்தப் படுகின்றன. ஜப்பானிய ஸ்தாபனமொன்றில் ஒத்துழைப்புடன் டிராக்டர்களும், ஜெர்மானிய ஸ்தாபனமொன்றின் ஒத்துழைப்புடன் டிரக்குகளும் தயாரிக்கப் படுகின்றன.

பிரதான ஸ்பிரிங்குகள் உட்பட டிராக்டர்களின் சில பாகங்கள் ஏற்கெனவே இங்கே தயாரிக்கப்பட்டு வருகின்றன. தண்டகாரண்ய அபிவிருத்தி நிர்வாகத்துக்காகப் பதினாறு டிராக்டர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே ராஜஸ்தான் கால்வாய்த் திட்டத்துக்கு டிராக்டர்கள் சப்ளை செய்வது பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், வெளிநாட்டுத் தொழில்நுட்ப ஆலோசகர்களின் உதவியுடன் டிராக்டர்களை மொத்தமாக உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டப்படி நடைபெற்று வருகின்றன; 1960-ம் வருஷ ஆரம்பத்துக்குள் சுமார் 1,200 டிராக்டர்கள் தயாரித்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ராணுவ தளவாடத் தொழிற்சாலையில் ராணுவ உபயோக டிரக்குகள் உற்பத்தி செய்யப்படுவதானது குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். ஜப்பல்பூரிலுள்ள "கன் காரியேஜ் பாக்டரியில்" டிரக்குகள் தயாரிப்புத் திட்டத்தைப் பிரதம மந்திரி சமீபத்தில் ஆரம்பித்து வைத்தார். "சக்திமான்" என்று பெயரிடப்பட்டுள்ள 3 டன் ராணுவ டிரக்கானது இந்திய மக்கள் தொழில் யுகத்தில் அடியெடுத்துவைக்க உறுதி கொண்டுவிட்டார்கள் என்பதற்கு அறிகுறியாக விளங்குகிறது என்றும், பொருளாதார ராணுவத் தன்நிறைவு பாதையில் நாம் மற்றொரு படியைத் தாண்டியிருக்கிறோம் என்றும் பிரதம மந்திரி அப்போது குறிப்பிட்டார். ஐந்து வருஷ காலத்துக்குள் 90 சதவிகித உள்நாட்டுத் தயாரிப்புப் பாகங்களடங்கிய டிரக்குகளை மொத்தமாகத் தயாரிப்பதற்கான ஏற்பாடு திருப்திகரமாக முன்னேற்றமடைந்துவருகிறது.

THE MADRAS TYPE FOUNDRY

MADRAS-1



Manufacturers of

- ★ Paper Cutting Machines
- ★ Peforasing Machines
- ★ Board Cutting Machines
- ★ Punch Cutting Machines
- ★ Calender Punching Machines
- ★ Miting Machines
- ★ Hard Press
- ★ Proof Press

and all other Printing Machines

இந்தியாவில் இரும்புக் கனி உற்பத்தி

1959 ஜூன் மாதத்தில் இந்தியாவில் மொத்தம் 375,000 மெட்ரிக் டன் இரும்புக் கனி வெட்டியெடுக்கப்பட்டிருப்பதாக இந்திய சுரங்கங்கள் ப்யூரோ அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

இதையும் சேர்த்து, 1959-ம் வருஷ ஆரம்ப முதல் வெட்டியெடுக்கப்பட்ட இரும்புக்கனியின் அளவு 3,771,000 மெட்ரிக் டன்னாகும். 1958-ல் இதற்குச் சரியான காலத்தில் வெட்டியெடுக்கப்பட்ட இரும்புக் கனியின் அளவு 5,078,000 மெட்ரிக் டன் ஆகும்.

இந்தியாவில் கைக்கடிகாரத் தொழிற்சாலை

பம்பாய் ஸ்தாபனம் ஒன்று பிரெஞ்சு ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் வருஷமொன்றுக்கு 3,50,000 கைக் கடிகாரங்களைத் தயாரிப்பதற்காக வகுத்துள்ள ஒரு திட்டம் சமீபத்தில் சர்க்கார் அங்கீகாரம் பெற்றிருக்கிறதென்றும், அந்தத் திட்டம் வெகு சீக்கிரத்தில் நிறைவேற்றப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தொழில் மந்திரி, ஸ்ரீ. மனுபாய் ஷா ராஜ்ய சபாவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

போன் 31738 தந்தி: மேரிகோல்டு

தொழில்

மாதமிருமுறை

55, எடப்பாளையம் தெரு, மதராஸ்:3.

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

கைக் கடிகாரங்கள் தயாரிப்பது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள வேறு சில தனிப்பட்டவர்களுக்கும் இத்தாலி, அமெரிக்கா, ஜப்பான், கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த கைக்கடிகாரத் தயாரிப்பவர்களுக்குமிடையே கூடப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றனவென்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் டெலிவிஷன் !

இந்தியாவில் 1959 செப்டெம்பர் மத்திய வாக்கில் டெலிவிஷன் செர்வீசுகள் ஏற்படுத்தப்பட்டு விடுமென்றும், அன்னியச் செலாவணி சிரமங்களின் காரணமாகத் தான் அவை ஏற்படுத்தப்படுவதில் தாமதமாகிறதென்றும், பம்பாயில் முழு நிலையிலமைந்த டெலிவிஷன் செர்வீஸ் ஏற்படுத்துவது மூன்ருவது திட்டத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் தகவல்-செய்தி ஒலிபரப்பு மந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி, ஸ்ரீ ஜி. ராஜகோபாலன், ராஜ்ய சபாவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இந்தியாவில் கிடைத்த சில டெலிவிஷன் கருவிகள் வாங்கிக் கொள்ளப் பட்டிருக்கின்றனவென்றும், மேற்கொண்டு இன்றியமையாமல் தேவைப்படுகிற கருவிகளில் குறைந்த பட்சம் இருந்தாக வேண்டியவை அமெரிக்க சர்க்காரிடமிருந்து கடனுகக் கிடைத்திருக்கின்றனவென்றும், யுனெஸ்கோ ஸ்தாபனமும் டெலிவிஷன் ரிசீவர்களை சப்ளை செய்து அந்தத் திட்டத்துக்கு உதவி செய்கிறதென்றும் அவர் மேலும் கூறினர்.

இந்தியாவின் முதலாவது அணுசக்தி மின்சார நிலையம்!

இந்தியாவின் முதலாவது அணுசக்தி மின்சார நிலையம் ஆமதாபாதுக்கும் பம்பாய்க்கும் இடையே கடற்கரையோரத்தில் ஏதாவது ஒரு இடத்தில் அமைக்கப்படும்; அதனுல் ஆமதாபாதுக்கும் பம்பாய்க்கும் மின்சரரம் சப்ளை செய்வதற்கு அதற்குத் தோதுவாகவிருக்கும். அவசியப்பட்டால் அது குஜராத்துக்கும் சௌராஷ்டிரவுக்கும் மின்சாரம் சப்ளை செய்ய முடியும்; இந்தப் பிராந்தியத்தில் இன்னும் அதிக அளவு மின்சார சக்தி அவசியப்படும் போது 2, 50, 000 கிலோ வாட் சக்தி உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது உற்பத்திப் பிரிவொன்றை அமைப்பதன் மூலம் அந்நிலையத்தின் உற்பத்திச் சக்தியை இரட்டிப்பாக்க முடியும்.

பட விமர்சனம்:

"மரகதம்"

டைரக்ஷன்: ஸ்ரீராமுலு நாயுடு.

வசனம்: முரசொலிமாறன்,

முக்கிய நடிகர்கள்: நடிக திலகம் சிவாஜிகணேசன், பாலசந்தர், டி. எஸ். துரைராஜ், டி. எஸ். பாலையா, சந்திரபாபு, எழிலரசி பத்மினி, சந்தியா, லஷ்சுமி ராஜ்யம், பேபி சரஸ்வதி.

கருங்குயில் குன்றம் என்ற ஜமீனின் அரசர் திடீரென்று கொலைசெய்யப்படுகிறார். அவர் தம்பியான மார்த்தாண்டன் மீது பழி சுமத்தப்பட்டுத், தூக்குத்தண்டனையும் கொடுக்கப்படுகிறது. ஜெயிலில் இருந்து மார்த்தாண்டன் தப்பித்து ஓடி, தன் மகள் ''மரகதத்தை'த் தூக்கிக்கொண்டு சிங்களத் தீவுக்குச் சென்று அங்கு வசிக்கிறார். இயற்கையின் எழிலைக் கண்டு ரசிக்க, சிங்களத்தீவிற்கு வந்து சேருகிறான் வரேந்திரன். உக்ரசிங்கன் என்ற கொள்ளைக்காரனிடம் அகப்பட்ட வரேந்திரனை, அலமு என்ற பெயரால் அழைக்கப்பட்டுவரும் மரகதம் காப்பாற்றிவிடுகிறாள். இரு உள்ளங்களிடமும், காதல் தீப்பற்றி எரிய ஆரம்பித்துவிட்டது. காதலுக்கு முட்டுக்கட்டையாக, அவர்கள் இரண்டு பேரும் மணந்துகொள்வது சாத்தியமில்லை என்று கூறுகிறார் மார்த்தாண்டன்.

படகில் மார்த்தாண்டனும், அலமுவும், இந்தியாவிற்கு வந்து சேரும்போது, உக்ரசிங்கனால் துரத்தப்படும்போது, வேறு வழி இல்லாமல் கடலில் குதிக்கவேண்டியதாகிறது. கரையை வந்து சேர்ந்த அல

EVEREST DISINTEGRATOR



HEAVY TYPE-NEAT WORKMANSHIP, to powder BONGS, OIL CAKE, COTTON SEEDS, MYNALOLAM, SOAP-NUT POWDER ETC. ETC.

ENQUIRIES SOLICITED

THE MADRAS MILL STORES

302, Linga Chetty Street, Madras-1

Phone : 21761 P. Box. 174 Tel : NAVASTAR

முறை கற்பகவல்லி அழைத்துச் செல்கிறாள்; தன் மகள் தான் அலமு என்பது கற்பகவல்லிக்குத் தெரியாது. கடலிலிருந்து தப்பித்த மார்த்தாண்டன், தன் அருமை மகளை இரகசியமாகச் சந்திக்கிறான். காலம் ஓடுகிறது; மார்த்தாண்டன், கொலைகாரனல்ல, நல்லவன்; யோக்கிய மாணவர், என்று தெரிய வருகிறது. உண்மை குற்றவாளிக் கண்டுபபிடிக்கப் படுகிறான். கொலை சம்பந்தமான சூழ்ச்சி வெட்ட வெளிச்சமாகத் தெரிய வருகிறது. கடைசியில் வழக்கம்போல் காதலர்கள் ஒன்றுசேர்கிறார்கள். இதுதான் கதை.

டைரக்ஷன் ஸ்ரீராமுலு, நல்ல முறையில் டைரக்ட் செய்துள்ளார். இப்படத்தில் சிம்மக்குரலோன் சிவாஜி கணேசன் இரண்டு பாத்திரங்களில் நடித்திருக்கிறார். இரண்டு பாத்திரங்களிலும் நனகு நடித்து ரசிகர்களிடம் "சபாஷ்" வாங்குகிறார்; நடிக திலகம் உண்மையாகவே, நடிக திலகமாகக் காட்சி அளிக்கிறார். எழிலாசி பத்மினியின் நடிப்பு உச்ச நிலையை அடைகிறது. சிறு

பெண்ணாக, சுறுசுறுப்பாக, அவர் நடித்திருப்பது பாராட்டத்தக்கது, துள்ளித்துள்ளி அவர் நடனம் ஆடும் போது, ரசிகர்களும் துள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். பாலச்சந்தரின் நடிப்பில், உயிர் இல்லை; முன்னேற்றம் மிகமிக அவசியம். டி. எஸ். துரைராஜ் நடிப்பு நல்ல ஹாஸ்யமாகஇருக்கிறது. டி. எஸ்- பாலையாவின் நடிப்பு வழக்கம்போல், கச்சிதமாக, ஒருவித குறையும் கூற முடியாத அளவுக்கு அமைந்துள்ளது. சந்திரபாபு, நன்கு நடித்துள்ளார். சந்தியாவின் நடிப்பு உணர்ச்சியுடன் அமைந்தியுள்ளது.

லட்சுமிராஜ்யம், பேபி சரஸ்வதி ஆகியோர்கள் ஆடியுள்ள நடனம், நன்கு இருக்கிறது; காதுக்கினிய கர்னாடகமெட்டுக்கள் ஏராளம்; முரசொலிமாறனின் வசனம் பரவாயில்லை. நடிக திலகம் சிவாஜி கணேசனும், எழிலரசி பத்மினியும் சேர்ந்து நடிக்கும் காதல் காட்சிகள், இயற்கையோடு ஒன்றிபோனதுபோல் கச்சிதமாக அமைக்கப்பட்டு, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கின்றன.

மொத்தத்தில், "மரகதம்" எல்லோரும் சேர்ந்து பார்க்க வேண்டிய ஒரு உன்னதப்படமாகும்.

———

விக்கிரமாதித்தனில் ஸ்ரீரஞ்சினி தோன்றும் காட்சி.

துள்ளி ஆடுகிறார் ஈ. வி. சரோஜா !

ரங்கா பிக்சர்சின் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற படத்திற்காக ஈ. வி. சரோஜா, மாலினி மற்றும் பலர் ஒன்று சேர்ந்து நடனம் ஆடும் காட்சி ஒன்று வாகினியில் படமாக்கப்பட்டது. பருவப்பூரிப்போடு, கூடிய கட்டழகு மங்கையான ஈ. வி. சரோஜா, கண்களை

சுழலவிட்டு, கச்சிதமாக நடனம் ஆடுகிருர். வறுமையில் சிக்கிய ஏழைத்தொழிலாளர்கள் தங்களுடைய முயற்சியால் வாழ்வில் வளம் பெற்றதைத் தொடர்ந்து ஆடிப்பாடி களித்திடும் காட்சியில்தான் ஈ. வி. சரோஜா நடனம் ஆடுகிருர். "எல்லோரும் வாழவேண்டும்" என்ற கருத்தை வலியுறுத்தும் பாடலுக்கேற்ப, ஈ. வி. சரோஜா, துள்ளித்துள்ளி ஆடி ரசிகர்கள் உள்ளத்தையும், துள்ள வைக்கிருர்.

வங்காளப் படத்தில் ராகினி!

கல்கத்தா "இன்ஹா" புரடக்ஷன்ஸ் தயாரித்து வரும் "கிரியார் டாலி டாலி" என்ற படம் முடியும் தருவாயில் உள்ளது. ராகினி இதில் முக்கிய பாகம் எடுத்து நடிக்கிருர் கோபி கிருஷ்ணன், ராகினி, சுகுமாரி இவர்கள் ஆடும் நடனங்கள் இப்படத்தின் முக்கிய அம்சமாக இருக்குமென்று தெரியபடுகிறது.

"வைஜயந்தி மாலாவும்" மகாலிங்கமும்!

செல்வம் ஒரு வக்கீல்; அவனுக்கு இன்பத்தை அளிக்கும் நீரோட்டமாக, வாழ்க்கை துணைவி ஒருவள் இருக்கிருள்; மல்லிகா! ஆஹா! பெயரில் தான் என்ன அழகு; பெயர் மட்டும்தாஞ அழகாக இருக்கிறது! பருவமும், எழிலும், ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு அவளை அழகு தெய்வமாக ஆக்கிக் கொண்டிருந்தன; வக்கீல் செல்வம் தன் வாழ்க்கைத் துணைவியை மறந்து, மல்லிகா மீது வட்டமிட ஆரம்பித்துவிட்டான். மல்லிகாவோ ஒருகொகாரி. கன்னிவாடி மிட்டாதாரை கொலைசெய்த அவளை தன்னுடைய வாதத்திஞல், தூக்கு கயிற்றிலிருந்துதப்பிவித்தான். தூக்குக்கயிறுக்குக்கூட அவள் உடலைத் தோடும் பாக்கியம் கொடுக்கப்பட்டதே, எனக்கு அந்தபாக்கியம் கொடுக்கப்படவில்லயே, என்று ஏங்கிஞன், அந்த அப்பாவி வக்கீல்.

அவன் மல்லிகாவை நாடிஞன்; மல்லிகா அவனைவிட்டு ஓடிஞள்; நடனக்காரி மல்லிகாவின் போக்கு அவனுக்கு சலிப்புத்தட்ட ஆரம்பித்தது; கண்டவன் முன் எல்லாம் குதிக்க ஆரம்பித்தாள் அந்தக் கட்டழகி மலிகா; வேலுச்சாமி முன் அவள் நடனம் மாடிக் கொண்டிருப்பதை பார்த்த வக்கீல் செல்வம், ஆட்சேபம் தெரிவித்தான்; மல்லிகாகுமுறிஞள்; வார்த்தைகள் தடித்தன. ஆவேசமாக அவளைத்தாக்கச் சென்றபோது, தந்திரமாக மல்லிகா விலகிக்கொண்டார்; வக்கீல் உருண்டார் மாடிப்படியில் இருந்து.

ஸ்ரீ. கணேஷ் மூவிடோனின் "வைஜயந்தி மாலா" என்ற படத்திற்காக இக்காட்சிகள் வாகினியில் படமாக்கப்பட்டன இதில் செல்வமாக மகாலிங்கமும், மல்லிகாவாக, கே. வி. சாந்தியும் நடித்தனர். படத் தயாரிப்பாளரான சுந்தரராவ் நட்கர்னியே இதை டைரக்ட் செய்கிருர். முகவை ராஜமா

ணிக்கும் வசனம் எழுதியுள்ள இப்படத்தின் இசைப்பொறுப்பை மகாதேவன் எடுத்துள்ளார்,

அழகி சுந்தரி அழும் காட்சி!

சுந்தரி ஒரு அழகிய நங்கை; அவள் அழகைக் கொத்தித் தின்ன "துரு துரு" என்ற கழுகுப்பார்வையுடன் சுற்றித் திரிகிருன் ஜம்பு; ஜம்பு, சுந்தரியை வம்பு செய்ய, ஆயிரம் அன்பு தோய்ந்த வார்த்தைகளை மழை மாதிரிக்கொட்டினுன். "கண்ணே, நீ என் இதயக்கீதம் அழகு மணம் வீசும்; உன் உடல் ஒரு சோலை அன்பே, அந்த சோலையில் அடியேனுக்கு அலைந்துதிரிந்து அந்த அழகை சுவைக்க இடம் கொடு" என்ருன்; இன்மொழிகளை உதிர்க்கும் அவனுக்கு இடம் கொடுத்துவிட்டாள் அந்த ஏந்திலாள். கள்ளமில்லா அவள் உளத்தைக்கனியவைத்து விட்டான் அக்காமுகன். ஜம்பை நினைக்கும்போதெல்லாம் அவள் உள்ளத்தில் ஒரு தெம்பு ஏற்பட்டது. அவள் உள்ளத்தில் ஏற்பட்ட தெம்பு ஜம்புவுக்கு வம்புசெய்ய இடம் கொடுத்தது; சுந்தரியிடமிருந்த கற்பை களவாடிவிட்டு காணுமல் சென்று விட்டான் அக்காமவெறியன். கன்னி, கற்பை இழந்துவிட்டு, கண்ணீரால் தன்னுடையக் கண்களைக் கழுவிவிட்டு உண்மையான உலகத்தை பார்த்தாள். சுந்தரி, அழுதாள்; கலங்கினுள்; புலம்பினுள்! துவண்டாள்; துடித்தாள் — பலன் தான் இல்லை. ஜம்போ, பெரிய எஸ்டேட் முதலாளியின் மருமகன் படுக்கை அறைப்பதுமையாகத்தான் அந்தப் பசுங்கிளியை உபயோகித்தான்; கன்னியின் கற்பு, எஸ்டேட் முதலாளி மருமகனுல் சூறையாடப்படும், இந்த உருக்கமானக் காட்சி அமராபுரொடக்ஷன்ஸ்" உத்தமி பெற்ற ரத்தினத்திற்காக வாகினியில் படமாக்கப்பட்டது எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை வசனத்தை "ஆரூர்தாஸ்" எழுதியுள்ளார்.

ஆந்திர அழகி பானுமதி இப்படி மணிமேகலையில் தோன்றுகிருர்.

மலடி என்று உலகம் கூறுகிறதே!

"அத்தான் நீங்கள் மறுமணம் செய்யத்தான் வேண்டும்" என்று குமுறுகிருள் ஒரு இளம் மனைவி. காரணம்?

காதல் கரைபுரண்டோடுகிறது ! சிவாஜி - கமலா (பாவை விளக்கு)

அவளுக்குக் கலியாணம் ஆகி விட்டது. ஆனாலும் குழந்தை செல்வம் இல்லை. உலகம் அவளை "மலடி" என்று அழைக்க ஆரம்பித்துவிட்டது.

"மலடி" என்ற வார்த்தையை கேட்க என்னால் சகிக்கவே முடியவில்லை!" என்று நெஞ்சு குமுறலுடன் சொல்லுகிறாள். முதல் தாரம், மனைவி.

203369

மகாதேவி பிக்சர் சாரின் படத்திற்காக இந்த உருக்கமான காட்சி கோடம்பாக்கம் வாகினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. இப்படத்தில் நாகேஸ்வரராவ் ராஜாவாகவும், சாவித்திரி சாந்தியாகவும், கண்ணம்பா தாயாகவும் நடிக்கின்றனர்.

———

ஒரு வருஷத்தில், ஜப்பானில் ஆறு ஸ்டுடியோக்களில் மொத்தம் 500 படங்கள் தயாராகின. அதில் 200 படங்கள் கலரில் எடுக்கப்பட்டனவாம்.

Edited & Published by K. Perumal Udayar,
Edapalayam Street, Madras-3. Asst. Editor: C. J. Marthandam. B.A
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.